20 காசு

காஞ்சி

31-8-69 நிறுவனர்: அண்ணாதுரை



உள்ளே....

★

ஒட்டுச் சாவடி
போகு முன்பு....!
(தம்பிக்கு மடல்)

இப்படி ஒரு சட்டம்!
(தலையங்கம்)

அண்ணா
இருந்திருந்தால்....!
(சிறுகதை)

மீண்டும்
புகையுமோ?
(நண்பர்க்கு மடல்)

கேட்டீரா சேதி?

கேள்வி-பதில்

பிறந்தநாள் வாரத்தில்
வெளிவருகிறது!

முந்நூறு பக்கங்கள்
காலிகோ பைண்டு

அறிஞர் அண்ணாவின்
சிறு கதைகள்
முதல் பகுதி

அறிஞர் அண்ணாவின்
திருஉருவப் படம்
போற்றிக் காக்க வேண்டிய
பொக்கிஷம்

புத்தகம் வேண்டுவோர் முன் பணம் அனுப்பி பெயரை பதிவு செய்துகொள்ளவும் (செப்டம்பர் முதல் வாரத்திற்குள்)

★

விலை ரூ. 10

பரிமளம் பதிப்பகம்,
9, அவின்யு சாலை, சென்னை-34.

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 31—8—69 | இதழ் 7

இப்படி ஒரு சட்டம்!

தமிழக மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றுதல்போல, பஞ்சாயத்துத் தலைவர்களை நேரடியாக மக்களே தேர்ந்தெடுக்கும் வகையில் புதியதொரு சட்டத்தை, இந்தக்கிழமை தமிழக அமைச்சரவை நிறைவேற்றி இருப்பது பாராட்டத்தக்கதாகும்.

முதலில் பஞ்சாயத்துத் தலைவரையும், அடுத்த கட்டத்தில் ஊராட்சி ஒன்றிப்பின் தலைவரையும் தேர்ந்தெடுக்கும் வகையில் சட்டம் அமைந்திருக்கிறது.

இதுவரையில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால், தேர்ந்தெடுக்கப்படுபவராகவே ஊராட்சித் தலைவர் இருந்துவந்திருக்கிறார். இதுபோலவே ஊராட்சித் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக ஒன்றிப்பின் தலைவர்கள் இருந்திருக்கின்றனர்.

இனிமேல் இந்த முறை மாற்றப்பட்டு, உறுப்பினர்களைப்போலவே, தலைவரும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார், முதல் கட்டமாக ஊராட்சித் தலைவர் மட்டும் இப்படித் தேர்ந்தெடுக்கப்படக்கூடும் என்றும் தெரிகிறது.

ஊராட்சி, நகராட்சித் தேர்தல்களில் கட்சி அரசியல் கலக்கக்கூடாது என்பது மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களது பெருவிழைவாகும். தமிழகத்தைப் பொருத்தமட்டில் தனிப் பெரும் எதிர்க்கட்சியாக இருக்கும் காங்கிரசுக் கட்சி இதற்கு இதுவரையில் உடன்பாடு காட்டாமலிருந்து வந்திருக்கிறது.

சட்ட மன்றத்தில் இப்போது நிறைவேற்றப்பட்ட ஊராட்சித் தலைவருக்கான தேர்தல் சட்டத்தை, அதன் விதிமுறைகள் வகுக்கப்படுமுன், அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களோடும் கலந்து ஒருமித்த கருத்து உடன்பாடு கண்டு, பின்னரே சட்டமாக்கப்பட்டிருப்பதாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

இதுபோலவே, கட்சி அரசியல் கலவாத முறையில் தேர்தல்கள் நடைபெறத் தக்கவாறு நல்லதோர் உடன்பாடு கண்டு அதன் வழியில் நடைபெறவிருக்கும் ஊராட்சித் தேர்தல்கள் நடைபெற வழி வகுத்தால் நல்லது என்றே நம்புகிறோம்.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மட்டுமல்லாமல், நகராட்சித் தலைவர்கள் தேர்தலினையும் இதுபோல் நேர்முகத் தேர்தல்களாக நடைபெறச் செய்தால் பலவித ஊழல் குற்றச்சாட்டுக்கள் கிளம்புவதனையும், உறுப்பினர்கள் கடத்தல் போன்ற பயங்கரமான குற்றங்களையும் தடுத்துவிட முடியும்.

இப்போதைய சட்ட நடைமுறையின்படி ஒருவர் ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், அவர் பதவிக்காலம் முடியும் வரையில் அவர் எவ்வளவு பெரிய தவறுகளுக்கு இலக்கானாலும், பதவியினைப் பறித்துக்கொள்ளத் தக்க முறை இல்லை. இதனை தி.மு. கழகம் தன் தேர்தல் அறிக்கையிலேயே சுட்டிக்காட்டி இருக்கிறது.

குற்றம் புரிந்தவர் அல்லது விரும்பத்தகாத நிலையில் செயல் படுபவர் என்று வாக்காளர்கள் நினைத்தால் ஒழுங்கு முறைக்கு உட்பட்ட வகையில், வகிக்கும் பதவியிலிருந்து குறிப்பிட்டவரை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கும் இதே சந்தர்ப்பத்தில் சட்ட ஏற்பாடு செய்து கொண்டால் விரும்பத்தக்கதாக இருக்கும். இப்படியொரு ஏற்பாடு செய்யப்பட்டு விட்டால், எந்த அரசியல் கட்சியும் தான்தோன்றித்தனமான போக்கில் தலைகால் புரியாமல் குதித்து ஆட்டம் போட வாய்ப்பற்றுப் போகும். அத்துடன், தேர்ந்தெடுத்த மக்களின் நல்ல நம்பிக்கையினைப் பெறும் வகையில், தங்கள் சேவையும், பதவியும் இருக்கத் தக்கவாறு நடந்து கொள்ளவேண்டிய கட்டாயம், உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தும்.

இந்தவகையில் உறுப்பினர்கள், தலைவர்கள் ஆகியோரது பதவிகள் கட்டுப்படுத்தப்பட்டால் பெரும்பான்மையான அரசியல் காழ்ப்புணர்ச்சிகளும், வெற்றுக் கூச்சல்களும், போலி ஆர்ப்பாட்டங்களும் மட்டுப்படுத்தப்படுவதோடு, பதவி என்பது சுயநல வேட்டைக்கு என்ற தீய எண்ணத்திலிருந்து விடுபட்டு, பதவி என்பது மக்கள் தொண்டுக்குரிய ஒன்று என்ற நிலையினையும் ஏற்படுத்த முடியும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு, பல நல்ல நடைமுறைகளுக்கு எடுத்துக் காட்டாத்க தன்னை ஆக்கிக் கொண்டிருப்பதாகும். நேரடித் தேர்தல் முறையைக் கொண்டுவந்து ஒரு சகாப்தத்தை உண்டாக்குவதைப் போலவே, உறுப்பினர்களது பதவியினைப் பறித்துக் கொள்ளும் விதியினையும் உண்டாக்குவதன் மூலம், மற்றுமோர் உதாரணம் படைத்த பெருமைக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். கழகத்தின் தேர்தல் அறிக்கை இதுபோன்ற நடைமுறைக்கு வழிகாட்டிக் கொண்டுமிருக்கிறது என்பதனையும் மற்றுமோர் முறை எடுத்துக் காட்டிக் கொள்கிறோம்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு முத்துசாமி அவர்கள், இது விஷயத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் உதவியையும் ஒத்துழைப்பையும் நிச்சயம் பெறுவார் என்ற நம்பிக்கை, பெருமளவுக்கு நமக்கு இருக்கிறது. பிற அமைச்சர்களும் இது விஷயத்தில் தங்கள் தங்கள் பங்கினைச் செலுத்தத் தவற மாட்டார்கள்.

எல்லா எதிர்க்கட்சிகளது ஒருமித்த கருத்தினைத் திரட்டுவதில் பெறுகின்ற வெற்றிதான், இந்தத் திட்டத்தின் வெற்றியாக இருக்கும், மாண்புமிகு முதலமைச்சர் நினைத்தால் முடியாததல்ல என்று நம்ப இடமுண்டு.

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஆகஸ்டு மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்.
'காஞ்சி.'
காஞ்சிபுரம்-3

கேட்டீரா சேதி!

பொறுத்திருப்போம்!

பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பது தமிழ் வழக்கு. இது மொரார்ஜிதேசாய் விஷயத்தில் நூற்றுக்கு நூறு உண்மையாகிப்போகும் என்று எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. குசராத் மாநில முதலமைச்சர் பதவியிலிருந்து துரத்தப்பட்டு, மத்திய அமைச்சராகி, அதிலிருந்தும் பதவி துறந்து, பின்பு மீண்டும் அமைச்சர், துணைப்பிரதமர் என்கிற அளவுக்கும் வந்து, மறுபடியும் அவைகள் பிடுங்கப்பட்டு, வெறும் செயல் குழு உறுப்பினர் என்கிற அளவோடு மட்டும் விடப்பட்டிருக்கிறார். போதாத காலம், இப்போது அந்தப் பிடியையும்கூட உதறித்தள்ளிவிடப் போகிறாராம் அவர்! தலையின் இழிந்த மயிரனையர் என்ற குறட்பாதான் நினைவுக்கு வருகிறது. இந்த குறட்பா நினைவுக்கு வருவதை அடுத்து, காமராசரும் கண்ணுக்குத் தெரிகிறார். கடுங் கோபத்தோடு செயற்குழுவை விட்டு வெளிவந்தாராம்! இவர் எப்போது எந்தப் பதவியைத் துறப்பார் என்பதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்!

அடிகளாருக்கு வேண்டுகோள்!

நம் நாட்டில் மடாலயங்களுக்கும் கோவில்களுக்குமாக கோடிக்கணக்கில் சொத்து சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. பெரும்பான்மையான இந்தப் பொதுச் சொத்துக்கள் குறிப்பிட்ட சில குழுவின் ஏகபோக ஆதிக்கத்தின் கீழ் வீண் செலவு செய்யப்படுகிறது. இவை அனைத்தும் அரசின் ஆதிக்கத்துக்குக் கொண்டுவரப்படும் நாளே உண்மையான சுதந்திர நாளாகும். இந்த வகையில் அரசோடு ஒத்துழைப்புத் தரவும், இது தொடர்பான நல்ல ஆக்கரீதியான யோசனைகளை வழங்கவும் குன்றக்குடி அடிகளாருக்கு நல்வாய்ப்பு நல்கப்பட்டிருக்கிறது. மேலவை உறுப்பினராக நியமிக்கப் பெற்றிருப்பதன் மூலம். அரசிடம் அள்ளிக் கொடுக்காவிட்டாலும், அந்தந்தப் பகுதியில் உள்ள கோயில்கள், மடங்கள் ஆகியவைகளின் கட்டுப்படுத்தப்பட்ட வருவாய், அந்தந்தப் பகுதியின் நல வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் அடிகளாரின் சிந்தனை செயல்பட்டால், முயற்சிகளில் ஈடுபட்டால் எதிர்ப்பேதும் எழாது என்றே நம்புகிறோம்.

விஸ்தரித்தால் நல்லது!

அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோர், ஆண்டுக்கொருமுறை தங்கள் சொத்து விவரங்களை சட்ட மன்றத்துக்குத் தெரிவிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது 1967 மார்ச் 6 முதல், அதாவது தி, மு. க. அமைச்சரவை பதவியேற்றது முதல் காட்டப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. எவ்வளவோ காலத்துக்கு முன்பே வந்திருக்க வேண்டிய நடைமுறை இது. காங்கிரஸ் காலத்திலேயே நடைமுறைப் படுத்தி யிருந்தால் பலபேரை இனங்கண்டு கொள்ள இது உதவி செய்திருக்கும், எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தினாலேயே செய்து முடிக்கவேண்டும் என்று தரப்பட்டிருக்கிற வாய்ப்புஎன்றே இப்போது கருதிக் கொள்ளலாம். இதுபோன்ற ஒரு நடைமுறையினை மாவட்ட அளவில், மாவட்டக் கட்சிச் செயலாளர்கள், அரசியல் பேச்சாளர்கள் ஆகியோருக்கும் விஸ்தரித்தால் நல்லது. விஸ்தரிக்கப்பட வேண்டும் என்றே தமிழக அரசைக் கோருகிறோம்.

பழிகாரர் அவர்!

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் துரதிருஷ்டத்தை அதன் சட்டமன்ற கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்களைக்கொண்டே அளவிட்டுவிட முடியும். 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற குறட்பாவை நினைவு படுத்திக்கொண்டிருக்கும் வகையில் செயல்படும் கருத்திருமனரை எப்படிப் பாராட்டுவது என்றே புரியவில்லை. 'நல்ல எண்ணம்' விளைவது நல்ல இதயத்திலிருந்து: தீய எண்ணங்கள் தீமனத்தின் பிறப்பிடங்கள். இதனைக் கம்பர் கூட அழகாக வருணித்திருக்கிறார். ஆயினும்கருத்திருமனர் 'நல்லதைக் காணமாட்டேன்; நல்லதைப் பேசமாட்டேன்' என்றே இருக்கிறார். அவரது கடந்த காலத்தில் தி.மு.க. மீது சுமத்திய பழிகள் ஏராளம். இதுபோல் இப்போதும் ஒன்றைச் சுமத்தியிருக்கிறார். அறநிலைய அமைச்சர் ஒன்றேகால் லட்சம் ரூபாய் நன்கொடை பெற்றதாகவும், அது உரிய இடத்தில் கொடுக்கப்படவில்லையென்றும், சொல்லி இருக்கிறார். இதனை சட்ட அவையிலே மறுத்திருக்கிறார் அமைச்சர். இதனால் திருவாளர் கருத்திருமனரை, பழிகாரர் கருத்திருமனர் என்று அழைக்கலாமா என்றே தோன்றுகிறது.

செப்டம்பர் 15ல் இருந்து … …பொழுதுவிடிய பொற்கோழி கூவுகிறது!

மாண்புமிகு நிதியமைச்சர் மதியழகன் துவக்கிய

தென்னகம்

ஆசிரியர்: கி. மனோகரன், எம்.ஏ., எம்.பி.,

வார ஏடாய் வெளிவருகிறது!

உலகத்தில் எந்த தலைவரும் "அண்ணா" என்று அழைக்கப்பட்டதில்லை — ஆனால் நாம் மட்டுமே அப்படியொரு தலைவரைப் பெற்றிருந்தோம்!

உலகத்தில் எந்த அரசியல் கட்சியும் "குடும்பப் பாசத்தோடு" வளர்த்ததில்லை — ஆனால் நமது ஆசான் அத்தகைய பாசத்தை ஊட்டியே நமையெல்லாம் ஆளாக்கி மறைந்தார்.

அந்த வரலாற்று நாயகராம் — வான்புகழ் அண்ணாவின்,

கொள்கை வழி செல்வதற்கும்… கொஞ்சுதமிழ் சொல்வதற்கும்…

தென்னகம்

கருத்து மடலாய் — காலப்பறவையாய் — உங்கள் கரங்களில் தவழும்

விவரங்கட்கு: தென்னகம், 122, டாக்டர்நடேசன்சாலை, சென்னை-5

தம்பி

புதுடில்லியிலிருந்து கிளம்பி வந்த மொரார்ஜிதேசாய், பூவிருந்தவல்லியிலே, காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கிவைத்தார்—ஞாயிறன்று!

இந்தத் திருநாளுக்குத் துணை நின்றனர், ஓ. வி. அளகேசன், போன்றோர்.

உள்ளூர் அமைச்சர்கள் உற்சவத்திலே கலந்துகொண்டனர்.

ஒரே ஒரு குறைதான்; மக்களுக்கு உற்சாகம் எழவில்லை!!

முதல் காரணம், முதன்முதலாக இவர்கள் அழைத்து வந்தது யாரை, கவனித்தாயா? மலடியைக் கொண்டு, பிள்ளைப்பேறின் சுகவழிபற்றிய போதனை பெறுவதுபோல, மங்கலநாண் இழந்தவளைக் கொண்டு, கட்டுக்கழுத்தினளுக்கு மங்கள ஸ்நானம் செய்விப்பது என்பார்களே, அதுபோல, பம்பாய் மாநிலத்தில், மக்களின் சீற்றத்தால் தாக்கப்பட்டு, மேற்கொண்டு அங்கே முதலமைச்சராக இருக்கமுடியாத நிலைபெற்று, நேரு பண்டிதருடைய தயவினாலே, டில்லியில் வேலை தேடிக்கொண்டு ஓடிப்போன மொரார்ஜி தேசாயை, அழைத்துவந்தார்கள்!

பாபம், அவர் ஆமதாபாத்தில் பட்ட அல்லலையும், பம்பாயில் பதறியதையும், மக்கள் பத்திரிகை வாயிலாகப் பார்த்திருக்கிறார்கள்.

பேச வந்தார் இந்தப் பெரியவர்; ஆமதாபாத்திலே, ஆத்திரமிகுந்த மக்கள், இவர் எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடியும், மக்களுக்குத் துரோகம் செய்துவிட்ட மகானுபாவரே! போதும் உமது பேச்சு! நிறுத்திக்கொள்ளும்! என்று பெருங்கூச்சலிட்டு, இவரைப் பேசவிடாமலே தடுத்துவிட்டனர். பெரிய கலகம் நேரிட்டது. பல நாள் பட்டினி கிடந்து, பரிதாபத்தை ஊட்டிப் பார்த்தார்; பிறகாவது பேச விடுவார்கள் என்று. அப்போதும் மக்கள், நீ என்ன மாயாஜாலம், மகேந்திரஜாலம் செய்தாலும், அதற்கெல்லாம் மயங்கப் போவதில்லை என்று கண்டிப்பாகக் கூறிவிட்டனர். பேச மேடை ஏறினார், கலகம்தான் மீண்டும்!

எந்த மாகாணத்தில் இவர் தேசிய [illegible] போராட்டக் காலத்திலே, வீரர் என்றும் தீரர் என்றும் தியாகி என்றும் கர்ம[illegible]றும் புகழ்ந்துரைக்கப்பட்டாரோ, அங்கு இவருடைய பேச்சு, செல்லாக்காசு ஆ[illegible]டது — இவர் வருகிறார் பூவிருந்தவல்லிக்கு!!

பாரததேசம் என்பது ஒன்று — இதிலே வடக்கு என்றும், தெற்கு என்றும் மத்திய சர்க்கார் என்றும், மாநில சர்க்கார் என்றும், இந்த மொழி என்றும், அந்த மொழி என்றும் பேசிப் பிளவு உண்டாக்கக்கூடாது என்று மொரார்ஜி 'தேசீய மாமந்திரம்' உபதேசித்தார்; அவருடைய மாகாணத்திலே, அவரை இந்த உபதேசத்தைப் பேசக்கூடவிடவில்லை; விரட்டி அடித்தனர், வீறுகொண்ட மக்கள்! அங்கு அல்லற்பட்டவரை அழைத்து வந்து இங்கு விழா நடத்திக் காட்டினர் அமைச்சர் பக்தவத்சலம்!! பரிதாபம்! ஆரம்

ஓட்டுச் சாவடி போகுமுன்பு...

போற்றி அகவல் போதுமா என்ன?

பமே அழுதுவடிவதாக அமைந்தது பற்றி அவருடைய 'ஆப்த' நண்பர்களேகூட ஆயாசப்பட்டுக் கொண்டார்களாம்!!

முதலமைச்சருடன் சேர்ந்து மொத்தம் நான்கு மந்திரிகள், தம்பி! டில்லி மந்திரி ஒருவர்—அவர்தான் மொரார்ஜி—குட்டி மந்திரி ஒருவர் — அரியலூர் அளகேசன் அவர்கள்!

எல்லோருமே அன்று வெளுத்து வாங்கிவிட்டார்களாம் போயேன் நமது கழகத்தை.

"கூட்டம் கூடும் அவர்களுக்கு—கும்பகோணம் மாமாங்கத்துக்குக் கூடத்தான் கூடுகிறது"—என்றாராம் ஒரு மேதை! இவர்களுக்குக் கூட்டம் வராததாலே, இந்தப்பேச்சுப் பேசுகிறார்கள், வெட்கமின்றி; பிறருக்குப் பெரியகூட்டம் கூட்டினால்; 'மாமாங்கக்கூட்டம்'என்று கேலி பேசுகிறார்களே, இவர்களுடைய நேரு வருகிற போது, கூடும்கூட்டமும், மாமாங்கந்தானா? அப்போது பார், வாயை! ஜனசமுத்திரம்! மக்கள் வெள்ளம்! இலட்சோப இலட்சம்! என்றெல்லாம் அப்போது பெருமை அடித்துக்கொள்கிறார்களே! — என்று கூட்டத்தில் இருந்த ஒருவர் பேசிக்கொண்டதாகக் கேள்விப்பட்டேன்.

நொந்த உள்ளம் கொண்டோர் தம்பி! பேசுவது. வேகாததைத் தின்றுவிட்டு வேதனைப்படுபவர் எடுத்திடும் 'வாந்தி'போலத்தான் — நாற்றமும் குழப்பமும் அவ்வளவு இருக்கும். எனவேதான், "கூட்டம் கூடுகிறதாம் கூட்டம்! என்ன கூட்டம்! மகாமகத்துக்குக் கூடத்தான் கூடுகிறது" என்று பேசினர். போகட்டும், எப்படியோ ஒன்று நம்மை நிந்திப்பதால், நொந்து கிடக்கும் அவர்கள் உள்ளத்துக்குச் சிறிதளவு சாந்தி ஏற்படட்டுமே, நமக்கென்ன நஷ்டம்!

மொரார்ஜி, மாகாணப் பிரிவினை உணர்ச்சி—வடக்கு தெற்கு என்ற பேதம் கூடாது, என்று இங்கு உபதேசம் செய்துகொண்டிருக்கிறார்—அதேபோது பம்பாய் மாகாண முதலமைச்சர் சாவன், திணறித் திண்டாடிப் போகிறார். மொரார்ஜி இங்கு தந்த உபதேசம் போலவே சாவன் அங்கு உபதேசம் செய்யப் புறப்பட்டார். மராட்டிய மக்கள் இதற்கு இடந்தரவில்லை!

> சம்யுத்த மராட்டியம் வேண்டும்! சாவன்
> திரும்பிப்போ!

என்ற முழக்கம் இடியென்று கிளம்பிற்று!

> இது சரியா?
>
> இது முறையா?
>
> அது தேசீயம் ஆகுமா?

என்றெல்லாம் சாவன், இறைகிறார்-மராட்டிய மக்களோ

> எமது உரிமையை இழக்கமாட்டோம்!
>
> எமக்கு சம்யுத்த மராட்டியம் வேண்டும்!

என்று முழக்கமிட்டிருக்கிறார்கள்.

கருப்புக் கொடிகளைக் காட்டி ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

முதலமைச்சர் கலந்துகொள்ளும் கூட்டமாதலால், போலீஸ் படை வரிசையும் ஏராளம், ஆட்சிக்குத் துதிபாடகர்களாக உள்ளோரும் நிரம்ப! எனினும், உரிமை முழக்கத்தின் முன்பு எந்தச் சக்தியும் நிமிர்ந்து நின்றிட முடியவில்லை! சாவன் பாடு, திண்டாட்டமாகிவிட்டது! போற்றித் திரு அகவல் போதுமானதாகிவிடவில்லை!

இந்த 'பம்பாய்' மாநிலத்திலிருந்து வந்த மொரார்ஜிதான் பூவிருந்தவல்லியிலே 'ஒற்றுமை'—'தேசீயம்' என்பனபற்றித் திருப்பல்லாண்டு பாடி இருக்கிறார்—ஆங்கிலத்தில்; அதனை அவசரத் தமிழாக்கித் தந்திருக்கிறார், அமைச்சர் பக்தவத்சலனார்.

வடக்கே உள்ள மக்கள் ஏதோ, மாகாணப்பற்று மொழிப்பற்று, ஏதுமற்று 'பாரதம்' என்ற பாசத்துக்கே கட்டுப்பட்டுப் போய்விட்டதுபோலவும், இங்கே மட்டுமே அதுபோன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுத்தப்பட்டு இருப்பதுபோலவும் அதுவும் நாம் நடத்துகிற பிரசாரம், விஷமத்தனத்தையும் விபரீதத்தையும் இங்கு மூட்டிவிட்டதுபோலவும் அந்த நஞ்சுபோக மொரார்ஜி போன்றோர் வந்து பேசுவதுபோலவும் ஒரு நாடகம் ஆடப்படுகிறது; தம்பி, உண்மை நிலைமையோ வேறு. அதனை நீயும் அறிவாய், நம் நாட்டிலுள்ள காங்கிரசாரும் அறிவர்.

எந்த மொழிக்காரரும், எந்த மாநிலக்காரரும் காங்கிரஸ் என்பதற்காகக் கட்டுப்பட்டு, தமது. உரிமைகளை இழந்துவிடத் தயாரில் இல்லை! ,கண் கண்ட கடவுள்' என்றும் 'பார் புகழ் தலைவர்' என்றும் பிற நேரங்களிலே கொண்டாடும் நேரு பண்டிதராக இருப்பினும், மொழி உரிமை, மாநில உரிமை என்ற பிரச்சினைகள் எழும்போது, பண்டிதரையே பதறி ஓடச் செய்கிறார்கள். காந்தி படமானாலும் நேரு உருவச் சிலையானாலும், கதர்ச் சட்டையானாலும் குல்லாயானாலும், கொளுத்துகிறார்கள். உடைத்துத் தூளாக்குகிறார்கள். துப்பாக்கிக் குண்டுகளுக்கு அஞ்ச மறுக்கிறார்கள்! இரத்தத்தைச் சந்தனக் குழம்பென எண்ணிக் கொள்ளுகிறார்கள்.

அமைச்சர்கள் அஞ்சி ஓடுகிறார்கள்! ஆமதாபாத்தில், அகில உலகப் புகழ்பெற்ற நேரு பண்டிதர், 90—நிமிடம் முயன்று பார்த்தார், கெஞ்சிப் பேசினார், கோபம் மிஞ்சிடப் பேசினார், கதை பேசிப்பார்த்தார், எதுவும் பலன் தரவில்லை!

> எங்கள் உரிமை
>
> எங்கள் குஜராத்!

என்றே எக்காளமிட்டனர்; குஜராத்திகள்!

வங்கமும்—பீகாரும் இணையும் என்று கூறினார், வங்க முதலமைச்சர் டாக்டர் ராய்! இஃதன்றோ தேசீயம்—இதுவன்றோ பாரதப் பண்பாடு என்று அங்கிருந்து மகிழ்ந்து வாழ்த்தினார் நேரு பண்டிதர். இங்கிருந்தபடியே ஆசிகூறினார் ஆச்சாரியார்! ஆனால் வங்க மக்கள் செய்தது என்ன?

கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பினர்—டாக்டர் ராய் மீது! அவர் 'தேசீய ஒற்றுமை' பேசித்தான் பார்த்தார்! "நான் தெரியவில்லையா? உங்கள் தலைவன்! வங்கத்துக்கு வாழ்வளிப்பவன்! உங்கள் சுகமே என் சுகம் என்று எண்ணிப் பணியாற்றும் ஊழியன்!" என்று ஏதேதோ பேசினார்! அவருடைய பேச்

ஏதும் அற்ற மொழி ஏற்றம் பெற்றதே!

சுக்குப் பக்கபலமாகப் போலீசும் பட்டாளமும் நின்றது! எனினும் சிங்கக்குணம்படைத்த வங்க மக்கள் இணைப்பு எமக்கு வேண்டாம் என்று தீர்ப்பளித்தனர்—டாக்டர் ராயைக் குற்றவாளிக் கூண்டிலே ஏற்றினர்—'தள்ளாத வயதிலே, இந்த எதிர்ப்புத் தருகிறீர்களே, தகுமா?" என்றார். 'எதிர்ப்பு உம்மீது அல்ல; எம்மைத்துச்சமாக மதித்த உமது போக்கினை எதிர்க்கிறோம்' என்றனர் வங்க மக்கள்! ஆர்ப்பரிப்பு அமளியாற்று! அடக்குமுறை, அமளியைக் காட்டுத் தீயாக்கிற்று! வங்கமும் பீகாரும் இணைந்து ஒரு பேரரசாகும் என்று பேசிவிட்டு வந்த டாக்டரே, பிறகு, இணைப்பு இல்லை! வங்கம் வங்கமாகவே இருக்கும்! என்று அறிவித்தார்! மக்கள் வெற்றி பெற்றனர்.

இதுபோல, வடக்கே, ஒவ்வொரு மாநிலத்தாரும் தத்தமது உரிமையைப் பாதுகாத்துக்கொண்ட பிறகு, தேசீயக் காலட்சேபம் செய்கிறார்கள்!

விருந்தினை முடித்துக்கொண்டு, பட்டுப்பட்டாடை அணிந்துகொண்டு, பீடத்தில் அமர்ந்து, விரலில் உள்ள வைர மோதிரத்தைப் பளபளப்பாக்கிக்கொண்ட பிறகு,

> வாழ்வாவது மாயம்
> செல்வம் ஒரு பிசாசு

என்று வேதாந்தம் பேசும், பாகவதரைப் பார்க்கிறோமல்லவா, அதுபோல் வடக்கே உள்ள தலைவர்கள் இங்கு வந்து நமக்குப் பேசுகிறார்கள்—வேறென்ன!

தம்பி! வடக்கே உள்ள மக்கள், தத்தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதிலே, தவறுவதில்லை. அதற்கான உரிமைக் கிளர்ச்சிகளிலே மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என்பது மட்டுமல்ல, அந்தக் கிளர்ச்சிகளில்,

> வெறுக்கத்தக்க பலாத்காரத்தை,
> கண்டிக்கத்தக்க காலித்தனத்தை,

புகுத்துகிறார்கள்!

இங்கு, நாம் நமது மாநில உரிமைக்காக, மொழி உரிமைக்காக நடத்துவது இன்னும் கிளர்ச்சி உருவம் கூட எடுக்கவில்லை! நியாயத்தை எடுத்துரைக்கிறோம்; காரணங்களைக் காட்டுகிறோம்; நீதி கோருகிறோம்; இதற்கே, எவ்வளவு இடி, இழிச்சொல்! எத்துணை அடக்குமுறை; தாக்குதல்!

நேரு பண்டிதர் சிலையை உடைக்கும் அளவுக்கு வடக்கே காலித்தனம் நடக்கிறது. அதற்குத் துப்பாக்கி தூக்குகிறது, அங்கு உள்ள துரைத்தனம். இங்கு நாம், பொது மக்களிடம் முறையிட்டுக்கொள்கிறோம், அதற்கே, துப்பாக்கி துரத்துகிறது!

இந்த இலட்சணத்திலே, மொரார்ஜியை அழைத்துக்கொண்டு வருகிறார்கள் இங்குள்ள அமைச்சர்கள், நமக்கு 'தேசீய' பாடம் போதிக்க! வெட்கம்! வெட்கம்! என்று கூறுவதன்றி வேறென்ன கூறுவது?

நான் பன்னிப்பன்னிக் கூறிவருகிறேன், 'இல்லாத ஒன்றை, இயற்கையாக எழாத ஒன்றினை, எத்தனைப் பெரிய தலைவர்களானாலும், அறிவாளர்களாயினும், ஆற்றலரசர்களாயினும் கூடி முயற்சித்தாலும், புகுத்தி நிலை நிறுத்திவிட முடியாது' என்பதனை காங்கிரஸ் நண்பர்கள் ஏதோ 'தேசீய ஒற்றுமை' என்ற உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது போலவும், அதனை நாம் பாழாக்குவது போலவும் எண்ணிக்கொண்டு வேதனைப்படுகிறார்கள், வெகுண்டெழுகிறார்களே யன்றி, இயற்கையாக எழ முடியாத ஓர் உணர்ச்சியை இட்டுக்காட்ட முயற்சிப்பது, தவறு என்பதை அறிந்து திருந்த அஞ்சுகிறார்கள். தம்பி! வெண்ணெய்ச் சட்டியை வெளியே வைத்திருந்தால் பூனை களவாடித் தின்றுவிடும் என்று பயந்துகொண்டு, வீட்டுக்கரசி, அந்த வெண்ணெய்ச் சட்டியை எடுத்து அடுப்புக்குள்ளே செருகி வைத்தால் என்ன ஆகும்!! 'தேசீயம்' பேசுவோர், நம்மீது குறைபட்டுக் கொள்கிறார்களே யன்றி இந்தப் பேருண்மையை உணர மறுக்கிறார்கள்.

எத்தனை எத்தனையோ நெருக்கடிகள், தாக்குதல்கள், இடிகள் இழி நிலைகள் ஆகியவற்றினுக்குப் பிறகும் தமிழன் என்ற ஓர் உணர்ச்சி இன்றும் மகிழத்தக்க அளவுக்கும், நம்பிக்கைதரத்தக்க வகையிலும், மின்னிக்கொண்டு இருக்கிறது என்றால், தம்பி! இந்த உணர்ச்சியைப் பெற, எத்தனை எத்தனை நூற்றாண்டுகள், எவ்வளவு பெரும் பெரும் அறிவாளர்கள், என்னென்ன வகையினாலே பணியாற்றினர், தெரியுமா! அவ்வளவையும் அரை நூற்றாண்டில் அழித்துவிட முடியும் என்று எண்ணிக்கொண்டனரே, அதிலே தான் தவறு இருக்கிறதே தவிர, நம்மீது என்ன குற்றம்?

சிலம்பு ஒலிக்கவில்லை, சிந்தாமணி மின்னிடவில்லை, அகம் இல்லை, புறம் இல்லை, தொல்காப்பியம் ஏதுமில்லை. எனினும், குஜராத்தி தன் மொழிக்கு ஏற்றமும் உரிய இடமும், தனித்தன்மையும், இவை தமைக் கெடுத்திடாத தனிக் கொற்றமும் தேவை என்று கேட்கலாமாம், கேட்பதுடன் விடாது கேடுபல நேரிடுமே என்றுகூட எண்ணிடாமல், அமைச்சர்களை விரட்டலாமாம், அமளி பலவற்றினை மூட்டிவிடலாமாம், இங்கு நாம் மட்டும், அருந்தமிழ் மரபு காத்திட, 'உம்' மென்றாலும் 'இம்' மென்றாலும் தேசீயம் கெடுமாம், பாரதீயம் பாழ்படுமாம், நாடு நலியுமாம்! என்ன அறிவீனம்!! என்று சீறிக் கேட்பதா? என்னே உமது ஓரவஞ்சனை? என்று துக்கத்துடன் கேட்பதா? நம்மை எவ்வளவு ஏதுமறியாதார், இனப்பற்று இல்லாதார், மரபு காத்திடும் வழி அறியாதார்' என்று எண்ணிக்கொண்டிருந்தால், மொரார்ஜிகளைக் கொண்டுவந்து இங்கு பேசச் சொல்வார்கள் என்பதை எண்ணிப்பார், தம்பி. எண்ணச் சொல்லிப் பார், காங்கிரஸ் நண்பர்களை.

அடுத்த இதழில்

அறிஞர் அண்ணா

அவர்களின்

வீட்டு விளக்கு!

என்ற தம்பிக்கு மடல் இடம்பெறும்.

இங்கு மட்டுமே இதுபோல் முடியும்!

பூவிருந்தவல்லியிலே மொரார்ஜி வந்து பேசி விட்டுச் சென்றார்: என் மாநிலத்திலேகூட இந்த அளவுக்கு எனக்கு மதிப்பளிப்பார் இல்லை, இங்கு என் புகழ்க் கொடி சிறப்புறப் பறக்கிறது என்றுகூட மகிழ்ந்திருக்கக் கூடும்; ஆனால் இங்கு அவர்,—"தமிழ் என் மொழி! தாய் மொழி! தமிழ் நாடு! தனி நாடு என்றெல்லாம் பேசுவது தீது. தவறு, தேசியமாகாது" என்றெல்லாம் பேசினாரே, அதுபோல, பக்தவத்சலனாரை குஜராத்திலே சென்று பேசச்சொல்லு. பார்ப்போம்; அழகேசரை ஆமதாபாத் போகச்சொல்லு; காமராஜரை பூனா போய், "மராட்டிய மக்களே! ஏன் உங்கள் மதி இப்படிக் கெட்டுவிட்டது!" என்று கேட்கச்சொல்லு பட்டாளம் அணி வகுத்து நின்றாலும் இவர்கள் தலை தப்புவது கஷ்டமாகிவிடும்! ஆமாம், தம்பி, அந்த அளவுக்கு அங்கெல்லாம் உரிமை உணர்ச்சி கொழுந்துவிட்டு எரிகிறது! இங்குதான், அபிசீனிய மன்னர் வரலாம், அகவல் எதுக்கு, ஆங்கிலப்பாடல் போதாதோ என்று பேசலாம், தலாய்லாமா வரலாம், திருவாசகம் எதுக்கு எமது திருப்பாதம் வீழ்ந்து வணங்கினால் போதாதோ என்று வினவலாம், தாழ்ந்து கிடக்கும் இந்தத் தமிழகத்திலேதான், துருக்கரின் பிடியிலே சிக்கிவிட்ட தமிழகத்திலேதான், உலகின் எந்தக் கோடியிலிருந்தும் எந்த வகையான தலைவரும் வரலாம், தமிழரின் மரபினை இகழலாம், தமிழரைக் கண்டித்துரைக்கலாம்; அதற்கு அவர் தமக்கு மாலையிட்டு மகிழ்விக்க, போற்றிப் புகழ்ந்திட, இங்கு பக்தவத்சலனார் படை வரிசை இருக்கிறது! வேறெங்கும் இந்நிலை வரவிடமாட்டார்கள்! ஏதுமற்ற நிலையைக்கூடப் பொறுத்துக்கொள்வர், எவர் வேண்டுமாயினும் எதை வேண்டுமானாலும் கூறிடும் இழி நிலைக்கு மட்டும் இடமளிக்கமாட்டார்கள்! பிச்சை எடுப்போன்கூடத் தம்பி, இல்லை போ! என்றால் ஏக்கத்துடன் சென்றிடுவான். மச்சு வீடுடையோனாயினும் அவனைப் பார்த்து, "ஏ! பிச்சைக்காரப் பயலே!" என்று பேசினால், எச்சிற் பண்டத்தைப் போட்டு வைத்திருக்கும் குவளையால் அடித்துவிட்டுக் கூறுவான், "மச்சு வீடு என்றுமே உனக்கு நிலை என்ற எண்ணமோ, நானும் எனக்கென்று ஓர் 'குச்சி' இருந்து அதிலே வாழ்ந்தவன் தான்! ஏன் உனக்கு இந்த வாய்த்துடுக்கு?" என்று கோபத்துடன் கேட்பான். போலீஸ் சுற்றியபடி இருப்பதால், இன்று மச்சு வீட்டுக்காரனுக்கு இது நேரிடாதிருக்கிறது!! தம்பி! அதனினும் இழிந்த நிலையிலன்றோ நாம் வைக்கப்பட்டிருக்கிறோம். சர்க்கசில் காண்கிறோமே, காட்டரசனும் சிங்கத்தைக் கூட்டிலே நிற்கச்செய்து, அதன் முதுகின் மீது ஆட்டுக் குட்டியைச் 'சவாரி' செய்யவைக்கிறானல்லவா, கரத்திலே துப்பாக்கி வைத்திருக்கும் 'கரடி' வித்தைக்காரன்! அதுபோலத்தான் தமிழக நிலைமை இருந்திடக் காண்கிறோம்!! அதுபோன்ற நிலைமை என்றால் கூடப் போதாது; இங்கு 'ஆடு' வீரம் பேசிட, அரிமா அடக்க ஒடுக்கமாக அதனைக் கேட்டுத்தீரவேண்டி இருக்கிறது.

மொரார்ஜிகள் பேசும்போது, மரபு மறவாத தமிழர் ஒவ்வொருவருக்கும் இதுபோன்ற எண்ணம் தானே ஏற்பட்டிருக்க முடியும்!! தேர்தலுக்கு எப்படி இது பயன படப்போகிறது!!

'இந்தியா' ஒன்று, என்று நமக்காகப் பேசிடும், இங்குள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கேகூட, குட்டும்' குத்தும் வலி தருமளவுக்கு ஏற்படுகிறபோது, என்ன பேசுகிறார்கள் என்பதை நாடு மறந்தாபோய்விட்டது! எத்தனை எத்தனை முறை குமுறி இருக்கிறார்கள், இவர்கள் தம் நாத் தழும்பேறப் பேசுகிறார்களே 'தேசியம்' அது, அப்போதெல்லாம் ஏன் மறைந்து படுகிறது?

டில்லி பாராளுமன்றத்திலேயே டாக்டர் லங்கா சுந்தரம் என்பார். "அரசியல் அதிகாரம் அனைத்தும் வடநாட்டிலேயே குவிக்கப்பட்டிருக்கிறது" என்று பேசுகிறார்; 1955 டிசம்பர் 14-ல்!

பொருள் என்ன இதற்கு? இத்தனைக்கும் இந்த டாக்டர்கள் நம்மை எல்லாம், நாட்டைப் பிடித்தாட்டும் 'நோய்' என்று கூசாது பேசுபவர்கள்! அவர்போன்றாருக்கே பொறுக்கவில்லை வடக்கே எல்லா அதிகாரங்களும் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கொடுமை.

சென்னை சர்க்கார் அமைத்த ஆலோசனைக் குழுவே, 1955, மே 30-ல்,

> "பெரும் தொழில்களைப் பொறுத்த மட்டில் சென்னை மாநிலம் வருந்தத்தக்க அளவு, புறக் கணிக்கப்பட்டிருக்கிறது"

என்று அறிவித்தது. ஏன், இந்த அழுகுரல்?

> புறக்கணிக்கப்பட்டிருக்கிறது

என்ற உண்மையையும் கூறுகிறது அந்தக் குழு; அதனால் நாடு வருந்துகிறது, வருந்தவேண்டும், என்ற எண்ணத்தையும், விளக்கிட,

> வருந்தத்தக்க

என்றும், எழுதுகிறது! 'தேசியம்' எங்கே ஓடிவிட்டது, இதுபோலக் கேட்கும்போது? இங்கே பெரிய தொழில்கள் இல்லையே என்ற கவலை குடைவானேன்? வருத்தம் பிறப்பானேன்? எங்கே இருந்தால் என்ன என்ற வேதாந்தம் ஏன் பிறக்கவில்லை! ஏன், புறக்கணிக்கப் பட்டுவிட்டதே என்ற துக்கம் துளைக்கிறது! அந்த உணர்ச்சி உங்கள் உள்ளத்திலே சுரக்கும்போதெல்லாம், அருமைக் காங்கிரஸ அன்பர்களே! நீவிர் அனைவரும், தி. மு. க. ஆகிறீர்கள்! பிறகு, பதவி, வேறு பக்கம் அழைக்கிறது, மோசம்போகிறீர்கள், மொரார்ஜியை அழைக்கிறீர்கள்.

சென்னை மாநிலம் வருந்தத்தக்க அளவு, புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் 1955-ல் கூறிவிட்டு, இப்போது தேர்தலில் ஓட்டுப் பறிப்பதற்காக, நீங்களே, தாரை தப்பட்டையுடன் கிளம்பி, தமிழாவது தெலுங்காவது வடக்காவது தெற்காவது எல்லாம் அத்தம், தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதாகக் கூறுவது பொய்யுரை, என்று பேசுகிறீர்களே, எதையும் ஆய்ந்தறியும் திறனும், முன்பின் பேச்சுகளை ஒப்பிட்டுப் பார்த்து உண்மை காணும் போக்கும் கொண்ட மக்கள், உமது புரட்டினைக் கண்டு கொள்ளமாட்டார்களா? என்று கேட்டால், காங்கிரசின் பெருந்தலைவர்கள் கூறும் பதில், "அவ்வளவு அறிவுத் தெளிவு உள்ளவர்கள், எத்தனை பேர் இருக்கிறார்கள்" என்பதுதான்.

தம்பி! நம் நாட்டுப் பாமர மக்களைக் காங்கிரசார்' எப்படி வேண்டுமானாலும் ஆட்டிவைக்கலாம் எதைச் சொல்லியும் நம்பவைக்கலாம், என்று மனப்பால் குடிக்

திட்டங்களாலே தீர்ந்த குறை யாதோ?

கிறார்கள், மக்கள் இதோ. நான் புட்டுப் புட்டுக் காட்டுவதுபோலப் பிரச்சினைகளை அலசி ஆராயாமலிருக்கலாம், ஆனால் அவர்களுக்கு உண்மையை ஒரு நொடியில் உணர்ந்துகொள்ளும் திறன் இருக்கிறது; காங்கிரஸ் தலைவர்களின் புரட்டினை, மக்கள் உணர்ந்து வருகிறார்கள்; நமது பிரசாரம் இதனைப் பலப்படுத்துகிறது!! மொரார்ஜீக்கள் வருவதாலே, இந்த நற்பணி குந்தகப்பட்டு விடாது!!

வடநாட்டிலிருந்து இங்கு மொரார்ஜிகள், அடிக்கடி வந்தபடி இருப்பதையும். அவர்கள் வருகிறபோதெல்லாம், இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள், வணங்கி வரவேற்று, வரம் கேட்டுப் பெறுவதையும், காணும் தமிழக மக்கள். அந்த நாட்களில் இங்கு வந்த வெலிங்டன், கோஷன், எர்ஸ்கின போன்ற துரைமார்களிடம் எப்படி இளித்துப் பேசி இனிப்புப் பண்டம் பெற்றார்களோ சீமான்கள், சிற்றரசர்கள். மிட்டா மிராசுகள். அதே செயலைத்தான், இப்போதுபக்தவத்சலங்கள், மொரார்ஜிகள் வருகிறபோது செய்கிறார்கள். முறை மாறவில்லை, ஆள் மட்டும்தான் மாறியிருக்கிறது என்பதையா தெரிந்து கொள்ளாமலிருக்கிறார்கள்

'ஓட்டு' வாங்குவதற்காக, தம்பி காங்கிரஸ் பிரசாரகர்கள், ஐந்தாண்டுத் திட்டச் சாதனைகளைப் பேசுகிறார்களல்லவா! எல்லாப் பேச்சாளர்களுமல்ல. மிகச் சிலரே அந்தச் சிரமத்தை எடுத்துக் கொள்வர்—பெரும்பாலானவர். நம்மை ஏசிவிட்டாலே போதும், என்று எண்ணிக் கொள்கிறார்கள் — உண்மையிலேயே சிலருக்கு, மிகக் காரமாக நம்மை ஏசுவதால் ஏற்படும் நாக்கெரிச்சலே வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் பேச இடமளிக்காது—நான் இந்தப் போக்குக்கு விதிவிலக்கு என்று குறிப்பிடத்தக்க ஓரண்டொருவரைக் கூறுகிறேன் —அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்திலே பெற்ற அரிய வெற்றிகளைக் கூறி ஓட்டுக் கேட்கிறார்கள் என்று வைத்துக் கொள். மக்கள். அதைக் கேட்கும்போது உள்ளபடி திகைக்கிறார்கள். பெருமைப்படத் தக்க, மகிழ்ச்சி கொள்ளத்தக்க வெற்றிகள் கிடைத்துள்ளன; நாடு. நலிவு போக்கிக்கொண்டது; எல்லோருக்கும் இன்ப வாழ்வுக்கு வழி ஏற்பட்டுவிட்டது; என்றெல்லாம் பேசும்போது மக்கள் தம்மைச் சூழ இருக்கிற வறுமையைப் பார்க்கிறார்கள்; தமது சொந்த வாழ்விலே கப்பிக் கொண்டிருக்கும் சோகத்தைப் பார்க்கிறார்கள்; என்ன அதிசயம், இது! ஐந்தாண்டுத் திட்டத்தின் அரிய வெற்றியாலே பாலும் தேனும் ஓடுவதாகச் சொல்கிறார். இந்தப் பாழும் கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே; நாம் பார்க்கும்போது. பழங்கலமும் அதிலே உள்ள பழஞ் சோறும், அதிலே நெளியும் பூச்சிப் புழுவும் தெரிகிறது! இவர் ஏதோ. இங்கு வளம் கொஞ்சுவதாகக் கூறுகிறாரே! எங்கே அந்த வளம்? யாருக்குப் பயன்படுகிறது அந்த வளம்! என்றுதான், எண்ணித் திகைக்கிறார்கள்.

ஐந்தாண்டுத் திட்டத்திலே அரிய வெற்றிகள் ஏற்படவே இல்லையா? என்று கேட்டால், ஏற்பட்டது! எப்படி ஏற்படாமலிருக்கும், இரண்டாயிரம் கோடி ரூபாயைச் செலவிட்டிருக்கும்போது! ஆனால், நமது கேள்வி, நாட்டு மக்களின் கேள்வி. அதனால் ஏற்பட்ட பலன், யாரை வாழ வைத்திருக்கிறது என்பதுதான!

இதற்கு மொரார்ஜிகள் தரக்கூடிய பதில்என்ன? இதோ என்னிடம் உள்ள பட்டியல்! நீயும் படித்துப் பார்.

முதல் ஐந்தாண்டுத திட்டத்தில் நீர்ப்பாசனத் திட்டங்கள்:

1. நந்திகொண்டா
2. கோசி
3. காக்ராபர்
4 ஹரிகே
5. துங்கபத்ரா
6. (டி. வி. சி) தாமோதர்
7. கோய்னா
8. ஹிராகூட்
9. பக்ரா—நங்கல்
10. ரீகண்டு
11. மயூராட்சி
12. சாம்பால்
13. பத்ரா
14. கட்டபிரபா
15. தூத்வா
16. கீழ் பவானி
17. மச்சகந்த்
18. சாரதா
19. ஜோக்
20. மாஹி
21. காந்தி சாகர்.

இவைகளெல்லாம் முதல் ஐந்தாண்டுத் திட்ட வெற்றிகள்.

இவைகளில். இங்கு பலன் தந்திருப்பது, எத்தனை என்று கேட்டுப் பார், அதற்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்ற கணக்கு கேள், வடக்கே உள்ளவை எத்தனை? செலவிடப்பட்ட தொகை எத்தனை? என்று கணக்குக் காட்டச் சொல்லு, பிறகு ஓட்டுச் சாவடிக்குப் போகட்டும் மக்கள்!

"நீயும் நானும் ஒற்றுமையாக இருக்கலாம்! உன் கைக் கடியாரத்தை என்னிடம் கொடுத்து வை! உனக்குத் தேவைப்படும்போது. நான் மணி பார்த்துச் சொல்லுகிறேன்"—என்று பாரிஸ் பட்டினத்து எத்தன் ஒருவன் சொன்னதாக நான் படித்திருக்கிறேன. மொரார்ஜிகளும். அவர்களின் அடிதாங்கி, அரசியலில் இலாபம் தேடுவோரும், பேசும் 'ஒற்றுமை' இதுபோன்றதுதான், வேறில்லை!

நாடு இதனை, மெள்ள மெள்ள அறிந்துகொண்டு வருகிறது; தேர்தலின்போது மேலும் தெளிவு ஏற்படப் போகிறது! நிச்சயமாக!!

தொழில் வளர்ச்சித் திட்டங்களில் தென்னிந்தியா இந்தியப் பேரரசால் ஒதுக்கித் தள்ளப் பட்டிருக்கிறது.

வீடெங்கும் நாடெங்கும் விளக்கிடு தம்பி!

என்று, சென்ற ஆண்டு ஜூலையில் மைசூர் சட்டசபையில், மைசூர் தொழில் மந்திரி, சென்ன பாசப்பா பேசி இருக்கிறார்.

இவர் என்ன, ஓட்டுக் கேட்க வரும், தி. மு. கழகமா? அல்லவே!

நாடு, எண்ணிப் பார்த்திடவே செய்யாதா? எண்ணிப் பார்த்திடும்படி செய்யும் பணியினைத்தானே நாம், மேற்கொண்டிருக்கிறோம். அது எந்த அளவுக்கு வெற்றி பெறுகிறது என்பதைப் பொறுத்துத்தான், தேர்தலில் நாம் வெற்றி பெறுவது இருக்கிறது.

நாடெங்கும், வீடெங்கும், இந்தப் பேச்சு எழ வேண்டும்; அதை ஆக்கித் தரும் பணிதான், தம்பி, உன்னிடம் நான் எதிர்பார்க்கிறேன்.

தாயும் மகனும்

மகன்:- எப்போதும் அழுதுகொண்டே இருக்கிறாயே, ஏனம்மா?

தாய்:- மகனே! என்னடா செய்வது. உன் அப்பாவுக்கு இன்னமும் ஒரு வேலை கிடைக்கவில்லையே! அந்த வேதனைதான்!

மகன்:- அப்பா, ஏனம்மா வேலைக்குப் போகாமலிருக்கிறார்?

தாய்:- வேலை கிடைக்கவில்லையடா மகனே!

மகன்:- போம்மா! அப்பா ஏமாற்றுகிறார்! வேலைதான் நிறைய கிடைக்கிறதாமே!

தாய்:- யாரடா அப்பா, சொன்னது?

மகன்:- நேற்று, கூட்டத்திலே ஒரு மந்திரி சொன்னார், அம்மா! ஐந்தாண்டுத் திட்டம் போட்டார்களாம்—நாடு சுபீட்சமாகிவிட்டதாம்—வேலை எல்லோருக்கும் கிடைக்கிறதாம்.

தாய்:- காங்கிரஸ் கூட்டமாடா மகனே!

மகன்:- ஆமம்மா!

தாய்:- அங்கு அப்படித்தான் மகனே! பொய்யை மளமளவென்று கொட்டுவார்கள்...சுபீட்சமாகி விட்டதாமா, நாடு...நம் வீட்டைப் பார்த்தால் தெரியவில்லையா இலட்சணம்! வேலையா கிடைக்கிறது, வேலை! யாருக்கு? இந்தக் காங்கிரசுக்குப் பக்க மேளம் அடிக்கிறவர்களுக்கு வேலை கிடைக்கிறது! அதுவும் என்ன வேலை? இவர்களை இந்திரன்; சந்திரன் என்று புகழ்கிற வேலை! வயிற்றெரிச்சலை ஏண்டா மகனே, கிளப்புகிறாய்...

மகன்:- ஏம்மா, அப்படியானா, பொய்யா பேசறாங்க...

தாய்:- எலக்ஷன் வருதடா, மகனே! அதனாலே, மக்களை ஏமாளியாக்கி ஓட்டுவாங்க அது போலப் பேசுகிறார்கள்,

மகன்:- நான் ஒரு சின்ன பொய் பேசினா, காதைப் பிடித்துக் கிள்ளி, கன்னத்திலே அறைகிறே...!

தாய்:- போடா, குறும்புக்காரா!...

மகன்:- காங்கிரஸ்காரர், நாடு சீர்பட்டுவிட்டது, எல்லோருக்கும் வேலை கிடைத்துவிட்டது என்று பொய்யை வாரி வாரி வீசறாங்க,...அவங்களை, என்ன செய்தே...?

தாய்:- என்ன செய்தேனா...தேர்தல் வருது,...மகனே! அப்போதுதானே, அவங்களுக்குப் புத்தி புகட்ட வேணும்...யார், அப்போது...

மகன்:- ஆமாம்மா! பெரிய மனுஷருங்க பொய் பேசுகிற போது, புத்தி சொல்லாமே விட்டு விட்டா என்னைப்போல சின்னப் பசங்கக்கூடக் கெட்டுப் போயிடுவாங்கம்மா...

தாய்:- ஆமாண்டா, மகனே! இப்படிப் பொய்யைப் பேசி ஜனங்களை ஏமாத்துகிற காங்கிரசுக்கு மறுபடியும் ஓட்டுப் போட்டா, நாடே கெட்டுப் போகும் ...நான் மட்டுமில்லடா, நம்ம பக்கத்து வீட்டு பங்கஜம், எதிர் வீட்டுத் தாத்தா, கோடி வீட்டுக் குப்பி, நம்ம மாமன் வீடு, எல்லோருமே இதே முடிவுக்குத்தான் வந்திருக்கிறோம்...

மகன்:- நான்கூட அம்மா, யாராரைப் பார்க்கிறேனோ. அவங்களிடமெல்லாம், இதைத்தான் சொல்லப் போகிறேன்.

தம்பி! எண்ணற்ற இல்லங்களிலே, இதுபோன்ற உரையாடல் நடைபெற்றுக் கொண்டுதான் உள்ளது.

எதுபற்றியும் கவலை கொள்ளாத இல்லங்கள், நம்மால் என்ன ஆகும் என்று எண்ணும் இல்லங்கள், இவைகளில் எல்லாம்கூட, இதுபோன்ற உரையாடல்கள் எழச் செய்யவேண்டிய பொறுப்பு, உன்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

ஓட்டுச் சாவடி போகுமுன்பு, நாட்டு மக்கள் எல்லாப் பிரச்சினைகளையும் அறிந்திடத்தக்க, முறையிலே, ஏசுவோருக்குப் பதிலளிக்க வேண்டும் என்ற எண்ணத்துக்கே இடமேற்படாத முறையில், இனிய எளிய, பிறரிடம் பகை காட்டாத தன்மையில், தம்பி, நீ அறிந்துள்ள உண்மைகளை, மக்களுக்கு எடுத்துக் கூறு, அதுபோதும்; ராஜாக்களும் கோடீஸ்வரர்களும் முகாமிட்டுள்ள காங்கிரஸ் நம்மை ஒன்றும் செய்துவிடாது! நாட்டு மக்கள், மீண்டும் ஓர் முறை, கேட்டினை மூட்டிவிடும் காங்கிரசைக் கட்டி அணைத்திட மாட்டார்கள்! அவர்கள், பட்டது போதும் என்ற நிலையில் உள்ளனர். ஓட்டுச்சாவடி போகுமுன்பு நாட்டு மக்களிடம், நிலைமையைக் கவனப்படுத்தினால், போதும்; நாம் மகிழத்தக்க பலன், நிச்சயம் கிடைக்கும். தொடர்ந்து பணியாற்று! வெற்றிக்கு வழிகாட்டு!!

அண்ணன்,

அண்ணாதுரை

(30—12—56 திராவிட நாடு இதழில்)

அண்ணா

இருந்திருந்தால்......!

—சி. சரோஜா

மீனா பெருமூச்செறிந்தாள்.

"அண்ணா மட்டும் இருந்திருந்தால் நீ இப்ப துரை மாதிரின்னா இருப்பே துரதிருஷ்டம் பிடித்தவன்டா நீ! நீயும் உன் கோலமும்...' புழுதி படிந்த உடல், பரட்டைத் தலை, கிழிந்த சட்டை ஒன்றும் புரியாமல் மிரள மிரள விழித்த கண்ணனை உற்றுப் பார்த்த மீனாவிற்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

"மண்ணில் விளையாடக் கூடாது என்று எத்தனை முறை சொல்லி இருக்கிறேன்? வா இங்கே!" தரதர வென்று கண்ணனின் சின்னக் கையைப் பிடித்து இழுத்துச் சென்றவள் ஒரு செம்பு நீரை அவன் மீது கொட்டினாள்.

"குளிர்றதும்மா" என்று குதித்த கண்ணன், "சட்டை...என்று அழத் தொடங்கினான், மீனாவிற்கு அப்போதுதான் தன் தவறு புரிந்தது சட்டை...? குளிரில் வெடவெடக்கும் கண்ணனின் பரிதாபத் தோற்றம் உள்ளத்தில் உறுத்திற்று. கண்ணனுக்கு இருப்பதே இரண்டு சட்டைகள்தான் நேற்றே தோய்த்து இருக்கவேண்டிய அந்த மற்றொரு சட்டை அப்படியே மூலையில் கிடப்பது அப்போதுதான் அவளுக்கு நினைவு வந்தது. நன்றாக நனைந்துவிட்ட இந்த சட்டையிலிருந்து சொட்டுச் சொட்டாக வடிந்துகொண்டிருந்த நீரைப் பார்த்துக்கொண்டே செய்வதறியாமல் நின்றாள் மீனா.

"அம்மா...சட்டை...."கொடியில் காய்ந்து கொண்டு இருந்த துண்டை எட்டி எடுத்து கண்ணனுக்குச் சுற்றி விட்டாள் அவள்.

"உன் சட்டையை உலர்த்தி இருக்கிறேன் கொஞ்ச நேரம் இப்படியே இரு."

"நேத்து போட்டுண்ட சட்டையை கொடு" என்று விடாப்பிடியாக கேட்டான் கண்ணன்.

"அதுவும் ஈரமாக இருக்கிறது; என்று மூலையில் கிடந்த சட்டையைப் பார்த்து கொண்டே கூறினாள் மீனா. எதையோ பேசவேண்டுமே என்பதற்காக. ஒரு மூலையில்போய் சுவரில் சாய்ந்து உட்கார்ந்த கண்ணன் என்னவோயோசித்துக்கொண்டிருந்தான். அவனுடைய சின்ன மனதில் என்ன யோசனை தோன்றியதோ? மெதுவாக எழுந்தான். அம்மா எங்கே போய்விட்டாள்? அந்த சின்னஞ் சிறிய ஓட்டுவீட்டில் மூன்றே அறைகள் கொண்ட அதில் அவனைத்தேட ஒரு நிமிஷத்திற்கு மேல் தேவை இல்லை. அதுவே அதிகம்தான். வாயில் அறையில் அப்பா பேசிக் கொண்டிருந்தார் பாட்டியுடன். அப்பாவைவிட அவருடைய இருமல்தான் அதிகம் பேசுகிறது என்றுகண்ணனுக்குத் தோன்றியது. நடுநடுவே வழவழவென்று பாட்டியும் என்னவோ பேசிக் கொண்டிருந்தாள். அம்மாவைப்போல் பாட்டியும் நெற்றியில் பொட்டு வைத்து அவள் பார்த்ததே இல்லை, ஒவ்வொரு நாளும் கண்ணன் நினைத்துக் கொள்வான் 'இந்த பாட்டிக்கு ஏன் இத்தனை மறதி?' என்று. பாட்டி தினப்படி செய்யும் அந்த இரண்டு காரியங்களிலும் ஒன்று அவனுக்கு பிடிக்கவே பிடிக்காது. நார் கட்டிலில் படுத்திருக்கும் நேரம்போக மற்ற நேரத்தை வீணடிக்காமல் கண்ணனைத் திட்டிக்கொண்டு இருப்பாள்.

ஹாலில் அம்மா இல்லை. அடுத்த அறை, அதிலும் அவள் இல்லை. கண்ணன் நினைத்தது சரியாகத்தான் இருந்தது. சமையல் அறையின் மங்கிய வெளிச்சத்தில் அடுப்பருகே அம்மாவின் மெலிந்த உருவம் புகை மூடிய அறைகுறை சிற்பமாகத் தெரிந்துகொண்டிருந்தது.

ஓசைப்படாமல் திரும்பிய கண்ணன் ஹாலை ஒட்டியிருந்த அறையில் நுழைந்து ஜன்னலில் ஏறி அங்கிருந்த சின்ன டிரங்குப் பெட்டியை எடுத்தான். பெட்டியைத் திறந்து அதில் மடித்து வைக்கப்பட்டிருந்த பெரிய ஷர்ட்டை கையில் எடுத்து தடவிப் பார்த்தான். வழவழப்பான அந்த சட்டை அவனுடைய ஆசையை அதிகமாக்கிற்று.

அடிமேல் அடிவைத்து மிகமெதுவாக நடந்து சென்ற கண்ணன் திடும்மென்று அம்மாவின் முன்னால் போய் நின்றான். மீனா திடுக்கிட்டாள். அவள் முன் அப்போது கண்ணன் நிற்கவில்லை. வாட்ட சாட்டமாக அதே ஷர்ட்டை அணிந்து......யார்......யார்...அது? மறுவினாடி எல்லாமே மறைந்து விட்டது. ஒரேகணம் விழி அசைக்காமல் வெறித்து நோக்கிய மீனா கண்கள் சிவக்க எழுந்தாள். கண்ணனின் முதுகில் சுறுசுறுவென்று எரிந்தது. ஆவேசத்துடன் அவன்போட்டிருந்த அந்த தொளதொளப்பான நீல டெரிலின் ஷர்ட்டை கழற்றியவள் அதைப் பெட்டியில் வைத்து மூடினாள் படீரென்று. அதற்குமேல் அவளால் நிற்கமுடியவில்லை. தொப்பென்று அங்கேயே உட்கார்ந்துவிட்டாள். அவளுடைய தோள்கள் குலுங்கியதிலிருந்து அவள் அழுது கொண்டிருக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டான் கண்ணன்.

கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள் மீனா. நினைக்கத் தெரிந்தே பழக்கப்பட்டுவிட்ட அந்த பாழும் இதயத்திற்கு மறக்கத் தெரியவில்லையே. ஏன்? கவர்ச்சிகரமாய் வளர்ந்து நின்ற இருபத்திமூன்று வயதான மூத்தமகன் கோபியின் சிரித்த முகம் — நினைவில் நீங்காத நிழலாய் உள்ளத்தோடு ஐக்கியமாகிவிட்டபோது அந்த நினைப்பின் பாரத்தை அவளுடைய மென்மையான உள்ளத்தால் தாங்க முடியவில்லை. கோபி வாலிபனாகிவிட்ட பிறகுதான் மீனாவிற்கு கண்ணன் பிறந்தான். அவளுக்கே அது வெட்கமாகத்தான் இருந்தது. ஐந்து வருஙகளுக்குமுன்......அன்றுதான் பிறந்தான் கண்ணன். ஆஸ்பத்திரி வார்டில் அவளுடைய கட்டில் அருகே வந்து நின்ற கோபியை பெருமிதத்துடன் பார்த்து பரவசப்பட்டது அந்த தாய் உள்ளம்.

"என் தம்பி பிறந்த இன்று நான் வேலையில் சேரப்போகிறேன். முதல் சம்பளம் வாங்கியதும் இந்த அதிஷ்

டக்காரப் பயலுக்கு ஒரு தொட்டில் வாங்கிவிட வேண்டும். பிறகு உங்களுக்கு........" அவன் பேசிக்கொண்டே போனான். அவளுடைய கனவுகளும் விரிந்துகொண்டே சென்றன.

"அம்மா வரட்டுமா?" குழந்தையின் பட்டுவிரல்களை ஆர்வத்துடன் வருடிய கோபி வெளியேறினான். மீனாவும் பார்த்துகொண்டே இருந்தாள். இத்தனை நாள் பட்ட கஷ்டங்கள் நினைவில் நிற்காத அளவிற்கு மறைந்து விடப்போகிறது. அந்த இருளைப் போக்கி அந்த குடும்பத்தில் ஒளி விளக்கை ஏற்றப் போகிறான் அவள் பெற்ற செல்வன். "கோ......பி......!" மெதுவாகக் கண்களை மூடிக்கொண்ட மீனாவிற்கு ஆயாசமாக இருந்தது. மனம் லேசாகி விட்ட நிலையில் இதமான தூக்கம் அவள் கண்களை அழுத்திற்று. எத்தனை நேரம் இப்படித் தன்னை மறந்த நிலையில் உறங்கியிருப்பாளோ? வெகு நேரத்திற்குப் பின் ஏதோ அரவம் கேட்கவே விழித்துக்கொண்டாள் மீனா.

ஸ்டெச்சரில் யாரையோ சுமந்துகொண்டு சிலர் அவசரமாக ஆபரேஷன் அறையை நோக்கிப் போய்கொண்டிருந்தது, சரியாகத் தூக்கம் கலையாத நிலையில் கனவில் நடக்கும் நிகழ்ச்சிபோல் பிரமை ஏற்படுத்திற்று அவளுக்கு. ஆஸ்பத்திரிகளில் இதெல்லாம் சகஜ நிகழ்ச்சிகள் தான் என்றநினைப்பில்பார்த்துக்கொண்டே இருநதவளின் விழிகள் திடீரென்று யாரையோ உற்று நோக்கின. அவளுடைய கணவர்....அவர்....அவர் ஏன் போகிறார் பின்னாலேயே. துண்டால் வாயை இறுக மூடிக்கொண்டு......? பரபரப்புடன் எழுந்துகொள்ள முயன்ற அவளுடைய தோளை அழுத்தி மெதுவாக அவளைப் படுக்கையில் படுக்க வைத்தாள் அப்போது டூட்டியில் இருந்த நர்ஸ். அவளுடைய கலக்கத்திற்கு அத்தனை விரைவில் பதில் கிடைத்துவிடும் என்று அவளே எதிர்ப்பார்க்கவில்லை.

"கோபி காரில் அடிபட்டு......" அதற்குமேல் கேட்கும் சக்தியற்று மயக்கமாகி விட்டாள் மீனா. நினைவு பறிபோய் கொண்டிருந்த அந்த தெளிவற்ற நிலையில்—அவளுடைய இதயத்தில் பிரமாண்ட கோபுரம் ஒன்று அடிபெயர்ந்து சரிந்துகொண்டே இருப்பதை அவளால் தெளிவாக உணர முடிந்தது. அவளுடைய ஆசைக் கனவுள் தானா இப்படி உருத்தெரியாமல் சிதைந்துகொண்டிருப்பது? அதற்குமேல் அவளுக்கு எதுவுமே நினைவில்லை.

அரைமணி நேரம் கழித்து அவள் கண் விழித்தபோது,

"மீனா மனதை தேற்றிக்கொள். எங்கள் ......எங்களுக்காகவாவது.... எனக்கு மட்டும் துக்கம் இல்லையா?" என்று அவளுடைய கரங்களை ஆதரவுடன் பற்றிக்கொண்ட கணவரின் தளர்ந்த கைகளை விலக்கியவள் உன்மத்தம் பிடித்தவளைப் போல் வாயிற் படியையே வெறித்து நோக்கினாள். அருகிலிருந்த குழந்தை அழத் தொடங்கியது. அதன் அழுகுரல் அவளுடைய கவனத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை. நர்ஸ் ஒருத்தி குழந்தையை அவளிடம் கொடுத்தபோது அவளுடைய கண்களில் தோன்றிய வெறுப்பு .... அப்பப்பா........!

"என்......கோபியை......என்னிடமிருந்து பறிக்க...வந்த எமன்தான் இது!" வெறுப்புடன் முணுமுணுத்த மீனா தலையணையில் முகம் புதைத்து விம்மி அழத்தொடங்கினாள். அதன் பிறகு அவள் உள்ளம் வெடித்து கண்களின் மூலம் கண்ணீராகக் கொட்டிய அந்த கண்ணீரை யாராலும் துடைக்க முடியவில்லை. கடைசியாக கோபி அணிந்திருந்த அந்த நீலடெரிலின் ஷர்டை நினைவுச்சின்னமாக்கி அதையேமணிக்கணக்கில் நேரம் போவது தெரியாமல் பார்த்துக்கொண்டே இருப்பது மீனாவிற்கு வழக்கமாகவே, ஆகிவிட்டது. வருடங்கள் ஐந்து கடந்தன காலம் கண்ணனை வளர்த்தது.

கண்களைத் துடைத்துக் கொண்டு சுய நினைவிற்கு மீண்ட மீனாவிற்கு அப்போதுதான் நினைவு வந்தது. அவளுடைய மனதில் பச்சாதாபம் தோன்றியது. தட்டில் சாதத்தைப் பிசைந்து எடுத்துக் கொண்டு கண்ணனைத் தேடிச் சென்றாள் "கண்ணா கண்ணா" என்று அவள் கூப்பிட்ட குரலுக்கு பதில் வரவில்லை. எங்கே போய்விட்டான்? என்று சுற்றிலும் நோக்கினாள். மூலையில் படுத்திருக்கும் அந்த சின்னஞ்சிறிய உருவம் கண்ணனுடையதாகத்தான் இருக்கவேண்டும். 'சாப்பிடாமல் தூங்கிவிட்டானே பசியோடு' என்று அவனை அசைத்து எழுப்பியபோதுதான் அவன் தரையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதையும் அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது. உடம்பில் சட்டையின்றி வெறும் தரையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த கண்ணனை அசைத்து எழுப்பி உட்கார வைத்தாள் மீனா. தூக்கம் முழுவதும் நீங்காத நிலையிலிருந்த கண்ணனின் வாயில் பலவந்தமாக ஊட்டிவிட்டாள், கண்ணனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூக்கம் முழுமையாக நீங்கிவிட்டது. சாப்பிடுவதை நிறுத்திவிட்டு அவளையேப் பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.

"என்னடா என்னையே பார்த்துக் கொண்டிருந்தால்...? சாப்பிடேன்" என்றாள் மீனா அலுப்புடன்.

"அம்மா, எனக்கு ஒரு புதுச் சட்டை வாங்கிக் கொடும்மா" ஆவலுடன் அம்மாவை நோக்கினான் கண்ணன்.

"புதுச் சட்டைக்கு எங்கேடா போவேன்? உன் அண்ணா இருந்திருந்தால் நீ கேட்டதை எல்லாம்... உனக்கு ... கொடுத்துவைக்கவில்லை கண்கள் குளமாக சரேலென்று எழுந்து போய்விட்டாள் மீனா.

"அண்ணா! யார்...யார் அந்த அண்ணா? பாட்டி, அப்பா, அம்மா எல்லோரும் வாய்க்கு வாய் இப்படி புகழும் அந்த அண்ணா எப்படி இருப்பார்?' அவன் அறியாமலேயே அவன் பார்க்காத அந்த அண்ணாவின் மேல் அவனுக்கு மதிப்பு உயர்ந்தது. அதே சமயம் ஆத்திரமும் உண்டாயிற்று. துரதிஷ்டம் பிடித்தவன் என்ற பெயரை அவனுக்கு நிரந்தரமாக்கிவிட்டு மறைந்துவிட்ட அந்த அண்ணாவின் மேல் அவனுக்கு கோபம் கோபமாக வந்தது.

அவனுக்கு நினைவு தெரிந்தது முதல் அவன் கேட்ட மொழி. உள்ளத்தில் பதிந்துவிட்ட வார்த்தை அந்த மூன்றே எழுத்துகளில்தானே அடங்கியிருக்கிறது.

'அண்ணா எங்கோ போய்விட்டார்? யார்மேல் கோபித்துக் கொண்டு எங்கே போய் ஒளிந்து கொண்டிருக்கிறார்?' எத்தனையோ முறை அவன் பிஞ்சு உள்ளத்தில் எழுந்த இந்த கேள்விக்கு யாருமே ஏன பதில் சொல்லவில்லை?

அவன் பார்க்காத அந்த அண்ணாவை எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்ற ஆசை கண்ணனுக்கு நாளுக்குநாள் வளர்ந்து வந்தது. கிழிந்த துண்டுடன் உட்கார்ந்திருந்த தன்னையே ஒருமுறை பார்த்துக்கொண்ட கண்ணனுக்குத் துக்கம் பிறிட்டது.

'அண்ணா மட்டும் இருந்திருந்தால் அவனுடைய குறைகளை நிவர்த்தி செய்திருப்பார் நிச்சயமாக

இந்த எண்ணம் எப்படியோ அவனுடைய இளம் மனதில் மாற்ற முடியாத வகையில் பதிந்துவிட்டது. யோசித்துக்கொண்டே இருந்த கண்ணன் விம்மி விம்மி அழத் தொடங்கினான். அழுதுக்கொண்டே தூங்கியும் போனான்.

அண்ணாவை எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்ற ஆசை அவனுக்கு கணத்திற்கு கணம் வளர்ந்து வந்தது. ஆனால் எப்படி அவரைப் பார்ப்பது? அது தான் புரியாத மர்மமாகவே இருந்தது அவனுக்கு. அந்த பேச்சை எடுத்தாலே அம்மாவின் கண்ணீரைத்தான் அவனால் காண முடிந்தது. அப்பாவிற்கு இருமுவதற்கே நேரம் பற்றாக்குறையாக இருக்கிறது. பாட்டி? கண்ணனைக் கண்டாலே அவனுடைய துரதிஷ்டத்தைப்பற்றி பிரலாபிக்கத் தொடங்கி விடுவாள். நடுங்கும் தொண்டையில் யோசித்து யோசித்து கண்ணனுக்கு மண்டை வெடித்துவிடும் போலிருந்தது.

அன்று காலை விடிந்தது முதலே ஊரே அமர்க்களப்பட்டுக்கொண்டிருந்தது. யாரோ செத்துவிட்டார்களாம். அண்ணாவே போய்விட்டார்! இனி யார் போனால் என்ன? ஒன்றிலும் சுவாரஸ்யமின்றி வாயிற்படியில் உட்கார்ந்து இருந்தான் கண்ணன். கூட்டம் கூட்டமாக ஜனங்கள் தலைதெறிக்கும் வேகத்தில் விழுந்தடித்துக் கொண்டு எங்கே போகிறார்கள் இப்படி? கண்கள் விரிய வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கண்ணன் திடீரென்று எழுந்து நின்றான்.

"அண்ணாவை கடைசி முறையாக எப்படியாவது பார்த்தேவிடுவேன்" யாரோ ஒருவன் தொண்டை அடைக்க கூறிக்கொண்டே போனான்.

'அண்ணா' இந்த வார்த்தைகள் மந்திரம் போட்ட மாதிரி கண்ணனை இயக்கிவிட்டது "அண்ணாவைப் பார்க்கவா இத்தனைக் கூட்டம்? கண்ணனுக்குப் பெருமை தாங்க முடியவில்லை.

"அண்ணா வந்திருக்கிறாரா? எங்கே...அண்...ணா!" மடமட என்று தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினான் கண்ணன். வினாடிக்கு வினாடி அதிகரித்துக் கொண்டே வந்த ஜன நெரிசலில் அவனுடைய சின்னஞ்சிறிய உருவமும் கலந்துவிட்டது. வீடு...... அம்மா......... அப்பா .... பாட்டி யாருமே அவனது நினைவில் நிற்கவில்லை.

அந்த நெடுஞ்சாலையை அடைத்துக்கொண்டு முன்னேறிய ஜன சமுத்திரத்தில் சிக்கிக் கொண்டு விட்ட கண்ணனுக்கு மூச்சு முட்டிற்று. பலரது கைகளில் இருந்த மலர்கள் நோக்கிய கண்ணன் வியப்புடன் அதையே பார்த்தான். பிறகு தன்னுடைய கைகளைப் பார்த்துக் கொண்டான்.

'அண்ணாவிற்குப் பூ என்றால் பிடிக்குமோ? அதுதான் எல்லோரும் பூ வைத்திருக்கிறார்களா?' வெறும் கையுடன் போய் அண்ணாவைஎப்படிப்பார்ப்பது? கண்ணன் சுற்றும் முற்றும் பார்த்தான். அந்த கூட்டத்தில் சில பூக்கள் கீழே சிதறிக் கிடந்தன.

கண்ணனின் கண்கள் ஒளிர்ந்தன. மெதுவாகக் குனிந்து ஒரு மலரை எடுக்க முயன்றான் கண்ணன். அவனுடைய பட்டுக் கையை மூர்க்கத்தனமாக மிதித்துகொண்டு ஓடின பல முரட்டுக் கால்கள். தாங்க முடியாத வலி. கைகள் தனியே பிய்ந்து விட்டதைப் போல் உடலெங்கும் ஒரு வேதனை அவனை வாட்டிய நிலையிலும் பூவை பிடித்த பிடியை விடாமல் சிரமத்துடன் எழுந்தான் கண்ணன்.

அந்த சின்ன உடலின் பல இடங்களில் சிராய்ப்பு ஏற்பட்டு இருப்பதையோ, ரத்தம் கசிவதையோ அவன் பொருட்படுத்தவில்லை, எப்படியாவது அந்த மலரை அண்ணாவிடம் கொடுத்துவிட வேண்டும் என்ற உறுதி பிறந்தது அவனுக்கு.

எங்கிருந்தோ காற்றில் மிதந்து வருகிறது பாண்டு வாத்தியத்தின் நெஞ்சை உருக்கும் சோக கீதம்.

"அதோ...அதோ...பாருடா..."

"அண்ணா...அங்கே பாருடா ... நம்......அண்ணாவை! கடல் அலை முழுவதும் தெருவெங்கும் அடித்துப் புரண்டோடி வருவதைப்போல் லட்சக் கணக்கான மக்கள் வெள்ளமாக வந்து கொண்டிருக்கின்றனர். ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு முன்னேறும் அசுர வேகம்...அத்தனைக் கோடிக் கண்களிலும், அத்தனை இதயங்களின் துடிப்பிலும் அண்ணாவைக் காணும் ஆவல் நிரம்பிக் கிடக்கிறது.

'அண்ணா...வந்து ... விட்டாரா... எங்கே...?...' கண்ணனுக்கு அத்தனை வலியும் மறந்து போய்விட்டது. ஒருவிதமான உத்வேகம் அவனை இயக்கிவிட்டது.

பாண்டு வாத்தியம் நெருங்கி வருகிறது. கட்டு மீறிய கூட்டம் பொங்கி எழுந்தபோது சுயவுணர்வற்ற மயக்க நிலையிலேயே கண்ணன் முன்னேறினான். நடக்கும் சக்தி எப்போதோ போய்விட்டது அவனுக்கு. கூட்டம் அவனைப் புரட்டிச் சென்று கொண்டிருந்தது தன் இஷ்டப்படி.

"யார்......அண்ணா...அண்ணாவா ......?" கண்ணன் விம்மினான். ஏன் என்று அவனுக்கேப் புரியவில்லை.

பீரங்கி வண்டி நெருங்கி வருகிறது. மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அந்த வண்டி நெருங்கிக் கொண்டே இருக்கிறது.

அவ்வளவுதான் ஓ வென்ற பேரிரைச்சலுடன் கூட்டம் கட்டு மீறுகிறது. நாலா புறங்களிலும். திசைகள் தெரியவில்லை. மனிதத் தலைகள். அத்தனையும் மனிதத் தலைகளே தென்படுகின்றன.

"அதோ அண்ணாவா வருகிறார்?"

'அண்...ணா...!' சக்தி முழுவதையும் திரட்டி கத்த முயன்ற கண்ணனுக்குத் தொண்டை அடைக்கிறது. கண்களுக்கு முன்னே கனத்த இருட்டு பரவி வருகிறது. இரண்டு எட்டு வைத்த கண்ணனின் சின்ன உருவம் அலங்கோலமாக பூமியில் தூக்கி எறியப்பட்டது.

அவனுடைய கைகளில் அவன்—அவனுடைய அண்ணாவிற்காக எடுத்து வந்த வாடி கசங்கிய மலர்—அவனைத் தாண்டிச் சென்ற பீரங்கி வண்டியிலிருந்த அண்ணாவின் நெஞ்சில் விழுந்தது.

அந்த குழந்தையின் பரிசை அன்புடன் ஏற்றுக்கொண்டு விட்டார் அண்ணா.

கண்ணன் அதிர்ஷ்டக்காரனாகி விட்டான்.

இனி யாரும் அவனை துரதிஷ்டம் பிடித்தவன் என்று கூறமுடியாது!

மக்கள் தலைவர்-கோடானு கோடி இதயங்களில் வாழும் அந்த அன்புருவின் புனித உடலில்—கண்ணனின் தூய மலர் அன்புக் காணிக்கையாகி விட்டது.

★

முகப்பில்:

இந்திய ஜனாதிபதி

திரு. வி. வி. கிரி அவர்கள்

மீண்டும் புகையுமோ?

அன்புள்ள நண்பா!

இருபத்துமூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்து முடிந்த ஒரு வரலாற்று நிகழ்ச்சியின் மீது மேலோட்டமான ஒரு கண்ணோட்டம் செலுத்திவரலாமா?

கி. பி. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் டில்லி செங்கோட்டையில் வானிடிக்கப் பறந்துகொண்டிருக்கிறதே தேசியக் கொடி! அதனைக் கூர்ந்து பார்! நடுவில் ஒரு சக்கரம் தென்படுகிறதா? சரி, அந்த சக்கரத்தைத் தூண்களில் பதித்தவனை இப்போது நினைவு படுத்திக்கொள்! நல்லது இப்போது உன் மனத்தில் அசோகன் இடம் பற்றிக்கொண்டிருக்கிறான்.

வா, நண்பா! அந்த அசோகனை—23 நூற்றாண்டுகளுக்கு முன்பு அவன் வாழ்ந்த வாழ்வினை—ஒரு கண்ணோட்டம் விடுவோம்!

குடி வெறியன்—காமுகன்—ஆத்திரக்காரன்—போர் வெறியன்! இப்படியெல்லாம் சிறப்புப் பட்டங்களைச் சூடிக்கொண்டிருந்த அசோகன், போர்வெறி உச்சிக்குப் போக. மகத நாட்டின் மீது பாய்கிறான் மத்தகஜமென! கலிங்கம் என்ற இடத்திலே படைகள் பொருதுகின்றன. முடிவு?

மகத மன்னன் தோற்றோடிப் போகிறான். இரு தரப்புப் படைகளும் பலத்த சேதத்துக்கு ஆளாகிப் போயிருக்கின்றன. காதலனைப் பறிகொடுத்த காதலியர் தம் புலம்பல் விண்ணுலகெட்டி வேதனையைக் கொட்டுகிறது. தலைவனை இழந்த தலைவியர்தம் தவிப்பு நெருப்பெனத் தகித்துக்கொண்டிருக்கிறது! பிற்காலத்தில் 'தாயில் உதூவாக்குழவி அன்ன' என்று புறம்பாடியதற்கொப்ப, தாயினைப் பிரிந்த அல்லது பறிகொடுத்த குழந்தைச் செல்வங்களின் கோவென்ற கதறல் போலே. கலிங்கமெங்கும் கதறல் ஒலி கையிழந்தவர் ஒருபக்கம்; காலிழந்தவர் மறுபக்கம்! கண் இழந்தவர் இங்கே! புண்படிந்தவர் அங்கே! ஆறென ஓடிக்கொண்டிருக்கிறது அருங் குருதி! கழுகுகள் வட்டமிட்டுக் குடைபிடித்திருப்பதுபோன்ற காட்சி! நரிகளின் ஊளை! நாய்களின் குரைப்பு!

படம் போட்டுப் பார் களக் காட்சியை! அசோகன் திணறிப் போகிறான். அவனது வெறி விளைத்த விபரீதங்கள் இவை! நடந்து முடித்த இந்தக் கோரக்கொடுமைக்கு முழுமையும் காரணமானவன் அசோகன்!

அசோகன் நடத்திய முதல் போரும் முடிவுப் போரும் இது அல்ல—இது முடிவுப்போர்! இடையே பல போர் முகங்களைச் சந்தித்து வெற்றிக்களிப்போடு எதிரிகளது குடல்களை மாலையாக்கிப்போட்டு மகிழ்ந்திருப்பதாக வரலாற்றாசிரியர்கள் வரைந்திருக்கிறார்கள்!

நமக்குக் காட்டப்பட்டுள்ள அசோகன் — புத்த மதம் தழுவிக் கொண்டவன்—இதனைத் தழுவி சாந்த சொரூபியாய் அவன் மாறிவிடக் காரணம் மேலே கண்ட கலிங்கத்துக் களம்! இதன்பின் அவன் நாட்டுக்கறிவித்தது பலப் பல! மேற்கொண்டவை மிகப் பல!

தான் உணர்ந்தவற்றை உலகுக்கு உணர்த்தும் சித்திரங்களாகச் செதுக்கித் தந்த நினைவுத் தூண்களில் காணப்படும் சின்னமே, இந்திய நாட்டு தேசியக் கொடியிலே இப்போது காண்கிறாய்! தெரிந்ததுதான் உனக்கு!

'இனிமேல் போர் செய்யமாட்டேன்.'

என்று சூளெடுத்துக் கொண்டானும் அவன்! ஒன்று போரிட்டு மாய்க்க மக்கள் இல்லா தொழிந்திருக்க வேண்டும்! இன்றேல் எதிரிகள் இல்லாதிருந்திருக்க வேண்டும்!!

வரலாற்றை இப்படியெல்லாம் விமர்சிக்கக் கூடாது என்று வரலாற்றாசிரியர்கள் வம்புக்கு வந்துவிடக்கூடும்! அசோகன்—

இனிமேல் போர் செய்யமாட்டேன்

என்று சூளெடுத்துக் கொண்டதோடு, அவனை விட்டு விட்டு, ஏறத்தாழ அதேநூற்றாண்டில் நிகழ்ந்த ஒரு வரலாற்றைப்பற்றியும் கொஞ்சம் காணவர அழைக்கிறேன்!

இவையெல்லாம் படித்ததுதானே! என்று முணுமுணுப்பது எனக்குத் தெரிகிறது! நண்பா! படித்தது தான்! ஆனால் படித்தபோது அதனைச் சுவைத்திருக்க மாட்டாய்! சுவையென்றால் சாமான்யச் சுவையா? விருந்துப் படையல்! ஏழெட்டு வகைக் கறிகாய்களோடு அப்பளம், வடை, பாயசத்தோடு படைக்கப்படுவது! சாப்பாட்டு ராமனா நான்! என்று கேட்டுவிடாதே! சுவை அப்படி! விஷயத்துக்கு வா!

கிரேக்க நாட்டிலிருந்து இந்தியாவின்மீது படையெடுத்து வருகிறான் மாவீரன் என்று அழைக்கப்பட்ட அலெக்சாந்தர்! அவன் அடியெடுத்து வைக்கு முன்னரே அவனைப் பற்றிய பிரதாபங்கள் வரப்போகும் இடத்திலே பரப்பப்படுகின்றன! பயங்கரமான கற்பனைகள் உலவவிடப் படுகின்றன.

நல்ல லாபம்! நல்ல வேட்டை! புகுந்த இடங்களில் பல தடவை எதிர்ப்பே இல்லாமல் வென்றான்! கொள்ளையிட்டான்! சூறையாடினான்! கன்னி இளமான்களது தோள்களிலே துவண்டான்!

வினா-விடை

ஸ்ரீ. சுந்தரம். திருப்பூர்.

தமிழுக்கும், தமிழர்க்கும் ஏற்றம் தரும் வகையில் வாழ்ந்து மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களது வாழ்க்கை வரலாற்றைப் பள்ளிப் பாடங்களில் சேர்த்தால் என்ன?

"காஞ்சி"யைப் பொறுத்தமட்டில் இதற்குத் தரப்பட வேண்டிய பதில் மிகச் சங்கடச் சூழ்நிலை கொண்டதாகும். பேரறிஞர் அண்ணா அவர்களே ஒரு காவியம். ஒரு வரலாறு. தமிழர்கள் மனத்தில் மட்டுமல்லாது. உலகத்தாரது உள்ளத்திலும் ஒளிர்பவர் அவர். இதே போல் மாணவர்களது இதயத்திலும் இடம் பற்றி இருப்பவர். கற்பதனை. கற்கும் முறைப்படிக் கற்று, கற்ற வழி நிற்றல் — அண்ணா அவர்களது வரலாற்றினைக் கற்றதற் கொப்பாகும். எனினும் காலம், இதற்குச் சரியான விடை தரக் கடமைப் பட்டிருக்கிறது.

நா. செயராமன், செ. சொர்ப்பனந்தல்.

வடநாட்டுக் காங்கிரஸ்காரர்களைப்போல், தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்கள், தலையில் 'காந்தி குல்லாய்' போடுவதில்லையே ஏன்?

"குல்லாய்" போட்டு நாங்கள் ஏய்க்க மாட்டோம்; அது போடாமலேயே எங்களுக்கு ஏய்த்துப் பிழைக்கத் தெரியும் என்ற 'தெம்பு' காரணமாக இருக்கலாம்!

பெ. தமிழொளி, மதுரை.

காஞ்சிபுரத்தில் ஒரு தமிழ்ச் சங்கம் செயல்படுவதாக அறிகிறேன். உண்மையா?

உண்மைதான்! கல்லூரி ஆசிரியர்கள் சிலரும், பள்ளி ஆசிரியர்கள் சிலரும் சேர்ந்து இலக்கிய வகுப்புக்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் இப்போது. தமிழுக்குச் சேவை செய்வதனால் தமிழ்ச் சங்கம் எனப் பெயரிட்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் நாமும் பங்கு பற்றும் அளவுக்கு அது மாறக் கூடும். பொதுத் தன்மையும் பெறலாம்!

சீலம் நதி வரையிலே இந்த நிலைதான். கரைக்கு அப்பால்! ஒரு போரஸ் இருக்கிறான் என்றோ, அவன் வீரத்தின் விளைநிலம் என்றோ மறந்தான்! போர்! போர்! கடும்போர்! போரசை வெல்லமாட்டாத வீரர்களுக்குக் கட்டளைப் பிறப்பிக்கிறான் தந்திரத்தால் வெல்லுமாறு!

போரஸ் தோற்றான் — எனினும் மங்காத மானம், அவனை மன்னனாகவே ஆக்கிவைக்கிறது!

போர் வெறியும்—கொட்டும் இரத்தமும் எத்தனைச் சுவையானது! அறியாதவன் அல்லவே அலெக்சாந்தர்! கிழக்கே போகுமாறு புதிய கட்டளைகளைப் பிறப்பிக்கின்றான்.

"இனிமேல் போர் செய்யமாட்டோம்"

என்று மறுத்துவிடுகிறார்கள் வீரர்கள்! மனைவி மக்களைப் பிரிந்து ஆண்டு பல ஆயிற்று என்ற காரணத்தால்! 'காரணம் எதுவாகவும் இருக்கட்டும்!

இருபத்துமூன்றுநூற்றாண்டுகளுக்குமுன் அசோகன் 'இனிமேல் போர் செய்யமாட்டேன்' என்று சூள் எடுத்துக் கொண்டான்; அதே நூற்றாண்டிலே வீரர்கள் மறுத்துவிட்டதால் இனிமேல் போர் இல்லை' என்று அலெக்ச்சாந்தர் அறிவிக்கிறான்! வேறு வேறான காரணங்கள் ஆயினும், 'இனி போர் இல்லை' என்ற வகையில் அறிவிப்பு ஒன்றுதான்,

நண்பா! இப்போது கி. பி. இருபதாம் நூற்றாண்டுக்குத் திரும்புவோம்! டில்லிக்குச் செல்வோம்!! ஒரு காட்சியைக் காண்போம்!

காங்கிரசுச் செயற்குழுக்கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

பிரதமர் இந்திரா அம்மையாரின் ஆதரவாளர்கள் எனப்படுவோரும், எதிர்ப்பாளர்கள் என்று கூறப்படும் 'சிண்டிகேட்'டார் எனப்படுவோரும், சிறப்பு அழைப்பின் பேரில் அழைக்கப்பட்டோரும் கூடியிருக்கிறார்கள்.

நமது காமராசர் இருக்கிறாரே. அவர்தான் நண்பா— சோஷலிசப் பிதா, அவரும் இருக்கிறார்; அவருக்கருகே மொரார்ஜி தேசாயும் இருக்கிறார். எஸ். கே பாட்டிலும் கூட இருக்கிறார். காமராசர் என்றவுடன், தவளைப் பாய்ச்சல் நினைவுக்கு வருகிறது! தமிழகத்திலே சில இடங்களில் அவருக்குக் கருப்புக்கொடி காட்டினார்களாம்! கண்திறந்து கண்டாரோ என்னவோ! சோஷலிசப் பிதா வென்ற விருதுக்குச்சொந்தக்காரரான அந்த விருதுநகர் வீரர், சோஷலிசச் சித்தாந்தத்துக்கு எதிராகச் செயல்பட்டு விட்டார் என்ற கொதிப்பு தமிழகக் காங்கிரசில் உள்ள சில தெளிந்தவர்களுக்கு! அப்படிப்பட்ட நிலையில் அவரும் அங்கே அமர்ந்திருக்கிறார்.

> இந்திராகாந்தி மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

என்று கூறிவிட்டு—கருத்துக்களை உலவத் தந்துவிட்டு வந்து அங்கே அமர்ந்திருக்கிறார்.

> இந்திரா மீது நடவடிக்கை எடுத்தால்தான் கட்சிக் கட்டுக்கோப்பை உண்டாக்க முடியும்

என்ற அறிவிப்பும் தந்துவிட்டு, அதற்கான பூர்வாங்கப் பணியாக அவருக்கு நோட்டீசும் தந்துவிட்டு நம்பிக்கைக் தோய்ந்த முகத்தோடு வந்து அமர்ந்திருக்கிறார் நிஜலிங்கப்பா! அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் தலைவர்!

> தங்களுக்கு ஏமாற்றம் அளிக்காத தன்மையில் செயற்குழுவின் முடிவு இருக்கும்

என்ற திடமனத்தோடு மொரார்ஜிதேசாயும், எஸ். கே. பாட்டிலும் வீற்றிருக்கிறார்கள்.

> இவரே அடுத்த பிரதமர் ஆக்கப்படுவார்

என்ற ஹேஷ்யத்துக்கு ஆட்படுத்தப்பட்ட சவானும் இருக்கிறார், தான் பிரதமர் ஆகாவிட்டாலுங்கூட, இப்

போதைய உட்பூசல்கள் களையப்பட்டு விடவேண்டுமே கடவுளே! என்ற பிரார்த்தனையுடன்.

செயற்குழு கூடியிருக்கிறது. செயற்குழு உறுப்பினர்கள் பலரும் பலவிதமான எண்ணத் தடுமாற்றங்களோடு வந்து அமர்ந்திருக்கிருர்கள்! ஒவ்வொருவரும் தத்தம் கட்சிக்குரிய காரண காரியங்களுக் குண்டான ஆதாரங்களுடன்!

இதுபோலவே பிரதமரும் வந்திருக்கிருர், நீதியை எதிர்பார்த்து!

வாதம் தொடங்குகிறது! அவரவரும் தத்தம் வாதங்களைத் தொடங்குகிருர்கள்! சூடேறிய நிலையில் ஒரு தீர்மான வாசகம் படிக்கப்படுகிறது. செயற் குழு ஸ்தம்பிக்கிறது! மூச்சு நின்று போகுமோ என்ற கவலை கூட பலருக்கு!

"இனிமேல், யார்மீதும் நடவடிக்கை இல்லை."

என்ற அறிவிப்பு பலருக்கு ஆச்சரியத்தையும், பலருக்கு வியப்பையும், சிலருக்கு ஆத்திரத்தையும் மூட்டுகிறது.

'யார்மீதும் நடவடிக்கை எடுப்பதில்லை' என்ற முடிவு மேற்கொள்ளப் பட்டால்தான் ஒரு பெரிய நெருக்கடியைத் தற்காலிகமாகத்தவிர்க்க முடியும் என்ற நிலையை செயற்குழு உணர்ந்து, அந்த முடிவை அறிவிக்கிறது. காரணம் எதுவாகவாவது இருக்கட்டும்—

"இனிமேல் நடவடிக்கை இல்லை."

என்று மட்டும் முடிவு செய்யப்படுகிறது.

'இனிமேல் போர் செய்ய மாட்டேன்'

என்று 23 நூற்ருண்டுகளுக்கு முன்பு அசோகன் சொன்னுன்.

—ஒரு நெருக்கடியிலிருந்து, தன்னை மீட்டுக்கொள்ள!

"இனிமேல் போர் இல்லை"

என்று அதே நூற்ருண்டில் ஒப்புக்கொண்டான் அலெக்சாந்தர்—

—ஒரு நெருக்கடியிலிருந்து, தன்னை மீட்டுக்கொள்ள.

'இனிமேல் நடவடிக்கை இல்லை'

என்று சொல்லி இருக்கிறது அ. இ. கா. க. செயற்குழு

—ஒரு நெருக்கடியிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள.

இப்படியொரு தீர்மானத்தைப் போட்டுத் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டிய சம்பவங்கள் பற்றியெல்லாம் கூறத் தேவையில்லை, நண்பா! நீ அறிந்திருப்பது தான்!

'இனிமேல் போர் செய்வதில்லை' என்ற முடிவுக்கு அசோகன் வராமலிருந்திருந்தால், ஒருக்கால் அசோகனுக்கேகூட அழிவு ஏற்பட்டிருக்கக்கூடும்! 'இனிமேல் போர் இல்லை' யென்பதை அலெக்சாந்தர் ஏற்றுக் கொள்ளவில்லை யென்ருல், சீலம் நதிக்கரையிலேயே அவனது முடிவு தெரிந்திருக்கக்கூடும்,

இதுபோல், 'இனிமேல் நடவடிக்கை இல்லை' என்று காங்கிரஸ் செயற்குழு முடிவு செய்யாது விட்டிருந்தால், டில்லியிலேயே காங்கிரசின் எதிர்காலம் நிர்ணயிக்கப்பட்டு விட்டிருக்கக் கூடும்.

அ. இ. கா. க. செயற்குழுத் தீர்மானத்தின் ஒரு பகுதி கூறுகிறது:

இரு தரப்பிலும் தவறுகள் செய்யப்பட்டுள்ளன.

என்பதாக! பிரதமர் தரப்பினரும், சிண்டிகேட் தரப்பினரும் இருவருமே தவறுகள் செய்து விட்டிருக்கிறோம்! எனவே இருவருமே குற்றவாளிக் கூண்டிலேற வேண்டிய நிலையில் இருக்கிறோம்! யார் யாரைக் கூண்டிலேற்றுவது என்பதை இப்போது நிர்ணயிக்க முடியவில்லை; எனவே இருவருமே ஒத்துப் போவோம்! இருவருமே கூண்டேறத் தேவையில்லை என்பதல்லவா இந்த வாசகத்தின் உட்பொருள். அதனுல் தானே 'நடவடிக்கைத் தேவையில்லை' என்ற முடிவு!

"தற்காலிகமான" என்ற அடைமொழி, இத்தீர்மானத்திற்கு இப்போது தரப்படாவிட்டாலும், உண்மையில் இதுவொரு தற்காலிகமான—தள்ளிப் போடக்கூடிய ஒரு தீர்மானமேயாகும்.

நடவடிக்கை தேவை என்ற வகையில் நிலைமை மாறுபட்டிருக்குமானுல்,: ஆட்சித் தலைவருக்கு அதிகாரமா? கட்சித் தலைவருக்கு அதிகாரமா? என்ற கொள்கைப் போட்டி பலப்பட்டிருக்கும். பூதாகாரமான வடிவத்தில் பிரச்னை குழப்பி விடப்பட்டு கட்சி பிளவுபட்டிருக்கும்!

குமுறிக் கொண்டிருக்கும் எரிமலை சீற்றம் தணித்துக்கொண்டது என்று கேள்விப்பட்டதுண்டா?

அலையின் ஓசை அடங்கும் என்பதைக் கதையாகக் கூட கேட்டதுண்டா?

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் சுயமரியாதைப் பிரச்னையில் குமுறத் தொடங்கி விட்டிருப்பது, தணிக்கப்பட முடிந்த ஒன்ரு? அதுவும் இருதரப்பிலும் தவறு என்ற நிலையில்!

நாட்டு நெருக்கடி அப்படி! ஒவ்வொருவரும் தம் தம் கோபத்தைத் தள்ளிப் போட்டிருக்கிருர்கள், தற்காலிகமாக!

காமராசரும், தேசாயும் கடுகடுத்த முகத்தோடு வீற்றிருந்த காட்சி பசுமையாகத்தான் இருக்கிறது!

இது போதும்—மற்ருெரு நெருக்கடியைச் சந்திக்க! காமராசர் வரலாறு அப்படி! காமராசரது ராசதந்திரத்தைச் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கியம், அவரது கட்சிக்கு இப்போது!

ஆனுல் நண்பா, காமராசரையே செல்லாக் காசாக்கியவர் பிரதமர் இந்திரா!

பொறுத்துப் பார்ப்போம்! புகை எங்கே, எப்படி ஏற்படப் போகிறது என்பதை!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்
... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது